


# "நொச்சி"


## இதழ் - 1

தேசிய வாசிப்பு மாத
சிறப்பு மலர் - 2019

கரைச்சி பிரதேச சபை,
பொது நூலகம்,
கிளிநொச்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# "நொச்சி"

## இதழ் - 1

# தேசிய வாசிப்பு மாத சிறப்பு மலர் 2019



வெளியீடு :

பொது நூலகம்

கரைச்சி பிரதேச சபை

கிளிநொச்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

ஒரு சமூகத்தினிடையே அருகி வருகின்ற பழக்கங்களை நினைவு படுத்தி ஊக்கப்படுத்துவதற்காக இன்று பல்வேறு வகையான சர்வதேச தினங்கள் கொண்டாடப்படுகின்றன. அந்த வகையில் இன்று நவீன தொழில்நுட்பம் காரணமாக வாசிப்புப் பழக்கமானது இளம் சந்ததியினரிடையே அருகிக் கொண்டே செல்கின்றது. இதனை நிவர்த்தி செய்வதற்கும் , ஊக்குவிப்பதற்கும் , இலங்கை அரசானது ஒவ்வொரு ஆண்டும் ஒக்டோபர் மாதத்தினை தேசிய வாசிப்பு மாதமாக பிரகடனப்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அந்த வகையில் இம்மாதத்தில் வாசிப்பின் மேன்மை கருதி மாணவர்களையும், ஏனைய வாசகர்களையும் ஊக்கப்படுத்தும் முகமாக எமது கிளிநொச்சி பொது நூலகத்தால் வருடம்தோறும் பல்வேறு செயற்றிட்டங்களும் போட்டிகளும் முன்னெடுக்கப்படுகின்றது. அப் போட்டிகளில் பரிசில்கள் பெற்ற வாசகர்களது ஆக்கங்களை ஆவணப்படுத்தும் நோக்கில் “ **நொச்சி** ” எனும் தேசிய வாசிப்பு மாத சிறப்பு மலர் - 2019 முதல் தடவையாக வெளியிடுவதில் நாம் பெரும் மகிழ்வடைகின்றேன்.

எனவே தொடர்ந்து வருகின்ற காலங்களிலும் வாசிப்பின் மூலம் சிறந்த சமுதாயத்தை உருவாக்குவதற்கு மாணவர்களிடையேயும், ஏனைய வாசகர்களிடையேயும் செயற்றிட்டங்களை முன்னெடுத்து “ **நொச்சி** ” இதழினூடாக ஆவணப்படுத்த வழிவகுத்துள்ளோம் என்பதனை கூறிக்கொள்வதில் மகிழ்வடைகின்றேன்.

**“ நல்ல நூல்களை – நாளும்**
**கற்போம்; ஒழுகுவோம்”**

**திருமதி.சசிகலா இரவிந்திரராசா,**
நூலகர் பொது நூலகம்,
கிளிநொச்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவஞானம் சிறீதரன் பா.உ.
M.Ed.,B.A.,PGDE(Me).,Sp.Tr.(Ag)
யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டம்,
882, ஆறுமுகம் வீதி,
வட்டக்கச்சி, கிளிநொச்சி, இலங்கை.
: 021 3207584, 021 2280024
: 021 2221595, 021 2280024
: 077 6913244
: shritharanmp@gmail.com
: www.shritharan.com

පාර්ලිමේන්තුව
பாராளுமன்றம்
PARLIAMENT

SIVAGNANAM SHRITHARAN M.P
M.Ed.,B.A.,PGDE(Me).,Sp.Tr.(Ag)
Jaffna Electoral District.
882, Arumugam Road,
Vaddakachchi, Kilinochchi, Sri Lanka.
: 021 3207584, 021 2280024
: 021 2221595, 021 2280024
: 077 6913244
: shritharanmp@gmail.com
: www.shritharan.com



# வாழ்த்துச் செய்தி.

## "நொச்சி" சஞ்சிகை வெளியீடு காலத்தின் தேவை கருதிய கனதியான பணி

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு கரைச்சிப் பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட கிளிநொச்சி பொதுநூலகம் தனது பணிகளின் தாக்கத்தை படைப்புக்களாக்கி அதற்கு நூலுருக் கொடுத்து முதற் தடவையாக வெளியீடு செய்யும், "நொச்சி" சஞ்சிகைக்கு வாழ்த்துரை வழங்குவதில் பேருவகை அடைகிறேன்.

கிளிநொச்சி மாவட்டத்தின் கல்விப்பண்பாட்டில் தனக்கென ஓர் தனியிடம் பிடித்து நிற்கும் கிளிநொச்சி பொதுநூலகம் இந்த மாவட்டத்தின் கல்வித்துறைக்கு ஆற்றிவரும் பணியானது! இந்த மாவட்டத்தின் கனதிமிகு வரலாற்றில் எத்தனையோ இடர்களையும், துயர்களையும் ,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இழப்புக்களையும், இடப்பெயர்வுகளையும் கடந்துவிட்ட பின்னரும் தன்னால் உருவாக்கம் பெறும் கல்விச் சமூகத்தின் வளர்ச்சியையும், உயர்ச்சியையும் மட்டுமே மனதிற் கொண்டு செயற்பட்டு வருவதன் ஓர் அங்கமாக தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு பாடசாலை மாணவர்களுக்கும், வாசகர்களுக்கும் நடாத்தப்பட்ட ஆக்கத்திறன் போட்டிகளில் தெரிவுசெய்யப்பட்ட ஆக்கங்களைத் தொகுத்து "நொச்சி" என்னும் மண்மணம் கமழும் ஒரு சஞ்சிகையை வடிவமைத்து வெளியிட்டு வைப்பது வரவேற்கத்தக்கது.

அருகிவரும் வாசிப்புப் பழக்கத்தை அதிகரித்து, மாணவர்களுக்கும் , வாசகர்களுக்கும் வாசிப்பின் மீதான நாட்டத்தை ஏற்படுத்தும் நோக்கோடு பல்வேறுபட்ட போட்டிகளை நடாத்தி அவர்களின் அறிவையும், ஆற்றலையும் , ஆளுமையையும் வெளிக்கொணர்ந்து அவர்களையும் இந்த சமுகத்திற்கு தரமான கவிஞர்களாகவும், எழுத்தாளர்களாகவும், படைப்பிலக்கியவாதிகளாகவும், அடையாளப்படுத்துவதை நோக்காகக் கொண்டு இச்சஞ்சிகை வெளியிடப்படுவது காலத்தின் பதிவேயாகும்.

எமது மாவட்டத்தின் படைப்பாளர்கள் இலைமறை காய்களாக தமக்குள் புதைத்திருக்கும் திறமைகளை இனங்காண்பதற்கு முடியாமலும், தமக்கு ஏற்ற களங்கள் எதுவுமற்ற சூழலிலும் வெறும் சாமான்ய மனிதர்களாகவே வாழ நிர்ப்பந்திக்கப்பட்டுள்ள சூழலில் அத்தகையவர்களின் படைப்பாற்றல்களை வெளிக்கொணர்வதற்கான ஆரம்பக் களமாகவும், அடுத்த கட்ட நகர்வுக்கான உந்துதலாகவுமே இச்சஞ்சிகை வெளியீட்டை என்னால் உணர முடிகின்றது.

காலத்தின் பதிவாய், கனதியான பதிப்பாய் இந்தமண் பெற்றெடுத்த மைந்தர்களின் பல்துறைசார் ஆக்கங்களோடு தனது முதற் குழந்தையைப் பிரசவிக்கும் "நொச்சி" சஞ்சிகையின் வெளியீடு சிறக்கவும், காலத்தின் தேவையுணர்ந்து செயலாற்றியுள்ள நூலகர்கள், பணியாளர்கள், கரைச்சி பிரதேச சபையின் தவிசாளர், உப தவிசாளர் , உறுப்பினர்கள் மற்றும் உத்தியோகத்தர்களின் உன்னதமான பணிக்கும் மனம் நிறைந்த வாழ்த்துக்களை வழங்கி நிற்கும் அதேவேளை இச்சஞ்சிகை வருடாவருடம் தொடர் வெளியீடு காண இறையாசிகளை வேண்டி நிற்கின்றேன்.

சிவஞானம் சிறீதரன்.
பாராளுமன்ற உறுப்பினர்,
யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டம்
இணைத்தலைவர் – மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு.
கிளிநொச்சி.

சி.சிறீதரன்,
பாராளுமன்ற உறுப்பினர்,
யாழ்ப்பாண தேர்தல் மாவட்டம்,
இல : 882, ஆறுமுகம் வீதி,
கிளிநொச்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கௌரவ தவிசாளரின்
# வாழ்த்துச் செய்தி



கரைச்சி பிரதேச சபையினால் தேசிய வாசிப்பு மாதத்தினை முன்னிட்டு பாடசாலை மாணவர்களிற்கிடையே நடாத்தப்பட்ட போட்டி நிகழ்ச்சிகளில் சிறப்பிடத்தினைப் பெற்றுக்கொண்ட எழுத்தாக்க படைப்புக்களினை ஒன்றிணைத்து கிளிநொச்சி பொது நூலகத்தினரால் வெளியீடு செய்யப்படவுள்ள 'நொச்சி' நூல் வெளியீடானது கரைச்சி பிரதேச சபை வரலாற்றில் முக்கிய நிகழ்வாகும். இந்நூலினை வெளியீடு செய்வதற்கு ஆக்கத்துடனும் ஊக்கத்துடனும் நூலகத்தினரால் மேற்கொள்ளப்பட்ட அனைத்து முயற்சிகளினையும் கௌரவ சபை மதிப்பார்ந்த நிகழ்வாகவே பார்க்கின்றது என்பது மகிழ்வானது.

சுற்றறிக்கைகளின் அடிப்படையில் போட்டிகளினை நடாத்துதல், பரிசில்களை வழங்குதல் என்பவற்றிற்கு அப்பால் எமது மாவட்ட சிறார்களின் ஆக்கத்திறனை எமது சமூகம் அடையாளம் கண்டுகொள்ளும் வகையில் அதனை அச்சேற்றுவது இன்றியமையாததாகும்.

நூலக வரலாற்றில் இளைய தலைமுறையின் ஆரம்ப அடையாளங்களை அவர்களின் ஆளுமைகளின் மூலதனங்களாக வித்திடுவதற்கு வழிவகுத்த நூலகர்கள் மற்றும் நூலக உதவியாளர்களிற்கு சபையின் சார்பில் வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்வதுடன் நூலக வரலாற்றில் முதன்மையான இந் நிகழ்வினை வாழ்த்துவதில் நிறைவடை கின்றேன்.

கிளிநொச்சி பொதுநூலகத்தினால் வெளியிடப்படவுள்ள 'நொச்சி' மலர் மலர்ந்து மணம் வீசவும் நூலகப் பணிகள் சிறப்புற நடைபெறவும் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அருணாசலம் வேழமாலிகிதன்,
தவிசாளர்,
கரைச்சி பிரதேச சபை,
கிளிநொச்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துச் செய்தி.

கற்கக் கசடற கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக"

கல்வி காலத்தால் அழியாத செல்வம். அதனை வழங்குவதில் நூல்களும் நூலகங்களும் பெரும் பங்காற்றுகின்றன. நூலாசிரியர்களால் படைக்கப்படும் நூல்களை ஒழுங்கு முறையில் வைத்துப்பேணும் இடம் நூலகம் ஒன்றேயாகும். கருத்தூன்றி வாசிக்கவும் குறிப்பெடுத்துப்படிக்கவும் ,சிந்திக்கவும் ஏற்ற சூழலை நூலகங்கள் மட்டுமே வழங்க முடியும்.அந்த வகையிலே உள்ளூராட்சி மன்றங்களால் வழங்கப்படும் நூலக சேவை பாராட்டுக்குரியது.சொந்தமாகப் புத்தகங்களை வாங்க முடியாத மாணவர்கள் வாசகர்கள்,சிறுவர்கள் எனப் பலரும் தத்தமது தேவைக்கான நூல்களை இரவல் வாங்கிப் படிக்கும் வசதியை ஏற்படுத்தியுள்ள கிளி பொது நூலகத்தால் வெளியிடப்படும் மலர் சிறக்கவும், முயற்சி தொடரவும் மனமுவந்து வாழ்த்துவதில் பேருவகையடை கின்றேன்.

ந. பிரபாகரன்
பிரா.உள்ளூராட்சி உதவி ஆணையாளர்
கிளிநொச்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி.



## "நொச்சியின் உதயம்" நீடித்து நிலைக்கட்டும்!

கிளிநொச்சிப் பொது நூலகத்தினால் முதன்முறையாக வெளியிடப்படும் "நொச்சி" மலருக்கு வாழ்த்து செய்தி வழங்குவதில் நான் பெருமகிழ்வடைகின்றேன். நூலகங்கள், மனிதனின் வழிகாட்டியாகத் திகழும் நூல்களை வழங்குவதோடு நின்றுவிடாமல், இவ்வாறான நூல் வெளியீட்டு முயற்சிகளில் ஈடுபடுவது மிகவும் பாராட்டுக்குரியதாகும்.

அறிவியலின் வளர்ச்சி முதிர்ச்சியடைந்து வரும் இக் காலகட்டத்தில், மனிதர்களிடையே வாசிப்புப் பழக்கத்தை மேம்படுத்தும் முகமாக மேற்கொள்ளப்படும், வாசிப்பு மாத போட்டியில் பங்குபற்றியோரின் சிறந்த ஆக்கங்களை உள்ளடக்கி வெளிவரும் இந்நூல், வாசிப்பின் இன்றியமையாமையை எடுத்தியம்புவதாகவும், ஆக்கங்களின் ஆவணத்தொகுப்பாகவும் விளங்குவதைக் காணக்கூடியதாகவுள்ளது.

பாடசாலை மாணவர்களினதும், ஆசிரியர்களினதும் ஆக்கங்களைத் தன்னகத்தே கொண்டுள்ள இந்நூல் மாணவர்களின் அறிவு, ஆக்கத்திறன், ஆளுமைக்கூறுகளை வெளிக்கொணர்வதோடு, கிளிநொச்சி மாவட்டத்தின் பண்பாட்டுக் கூறுகளையும், அறிவுசார் ஆக்கங்களையும் தாங்கி வெளிவருவது சிறப்பானதாகும். இந்நூல் தொடர்ந்தும் வெளிவர வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்து மகிழ்கின்றேன்.

த.முகுந்தன்,
பிரதேச செயலாளர்,
கரைச்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சபைச் செயலாளரின் வாழ்த்துச் செய்தி

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு கரைச்சி பிரதேச சபையின் கிளிநொச்சி நூலகம் முதல் தடவையாக கடும் பிரயத்தனத்தின் மத்தியில் "நொச்சி" என்னும் நூலை வெளியிடுவதையிட்டு மன மகிழ்வடைகின்றேன். இவ் அரிய முயற்சியை பாராட்டுவதோடு இறையருளையும் ஆசியையும் வேண்டி நிற்கின்றேன். மனிதனின் அறிவுப் பசியை போக்கும் அறிவாலயங்களில் நூலகமும் தன்னிகரில்லாத சேவையை வழங்கி வருகின்றது என்றால் மிகையாகாது. கிளிநொச்சி நூலகத்தின் கன்னி முயற்சியில் மாணவர்கள், வாசகர்கள், நலன் விரும்பிகள் போன்றவரின் ஆக்கங்கள் உள்ளிட்ட விடயங்களை உட்கொண்டு இம் மலர் மலர்கின்றது.

சிதறிக்கிடந்த மலர் இதழ்களை எல்லாம் இணைத்து தொகுத்து மணம் வீசும் நல் மலராக ஆக்கம் பெறுவதற்கு ஒத்துழைத்த நூலகர், நூலக உதவியாளர்கள், பணியாளர்கள், நூலக அபிவிருத்தி, ஆலோசனைக் குழுவினர் மற்றும் சபைத் தவிசாளர் உள்ளிட்ட சபை உறுப்பினர்கள், உத்தியோகத்தர்கள், உதவும் கரங்கள் அனைவருக்கும் நன்றி தெரிவிப்பதோடு இம்மலர் ஆண்டு தோறும் வாடா மலராக மணம் வீசி மலர வேண்டும் என வாழ்த்தி விடை பெறுகின்றேன்.

நன்றி

**கார்த்திகேசு சண்முகதாசன்,**
செயலாளர்,
கரைச்சி பிரதேச சபை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளே.......


| | |
|---|---|
| வாசிப்பு மனிதனை மேம்படுத்து......... | 1-3 |
| மாணவர்களின் கல்வி வளர்ச்சியில்........ | 4-6 |
| பசுமை......... | 7-9 |
| அமைதி......... | 10 |
| சிறுவர் கல்வியில் நூலகத்தின்......... | 11-12 |
| தொழில்நுட்ப வளர்ச்சியில்......... | 13-15 |
| அழியாத கோலம்......... | 16-19 |
| சமூக மேம்பாடும் நூலகமும்......... | 20-22 |
| விழிப்புடன்......... | 23-24 |
| நான் யார்?......... | 25-28 |
| சமநீதி பேணுவோம்......... | 29 |
| மனிதத்தைத் தேடி......... | 30 |
| மொழிபெயர்ப்புக் கலையின் தோற்றம்....... | 31-37 |
| வையகம் புகழும்......... | 38 |
| உயர்தர மாணவர்......... | 39-41 |
| உலகம் ஒரு விரலில்......... | 42 |
| ஆட்கொல்லி டெங்கு | 43 |
| மண்வாசம்........ | 44-46 |
| காத்திருப்பு......... | 47-51 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கரைச்சி பிரதேச சபை, பொதுநூலகம், கிளிநொச்சி - வாசகர் வட்ட உறுப்பினர்கள்



படத்தில் :
திருமதி சசிகலா இரவீந்திரராசா நூலகர் , கௌரவ உறுப்பினர் கந்தையா கணேசலிங்கம், திரு.கார்த்திகேசு சண்முகதாசன் செயலாளர், கௌரவ தவிசாளர் அருணாசலம் வேழமாலிகிதன், கௌரவ உப தவிசாளர் சின்னையா தவபாலன் , திரு.நா.சோதிநாதன் (ஓய்வு நிலை அதிபர்) அழகேந்திராசா சசிகுமார் சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர், திருமதி.விஜயலக்சுமி கௌரிதாசன் ( ஆசிரியர்), திரு.சு.சுஜந்தன் , திரு.பு.பரமசிகாமணி , செல்வன் சி.டிலைக்சன், செல்வி நீ.ஜனகா முகாமைத்துவ உதவியாளர், செல்வன் கி.யதுசிகன், செல்வன்.ப. தயாளன் திரு.உ.உமாசங்கர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# “வாசிப்பு மனிதனை
## மேம்படுத்தும்”

மாணவ மணிகளே!

**பரந்துபட்ட கல்வியில் அணுவளவேனும் கற்று சிந்தை விருத்தியடைய அறிவுச்செல்வத்தை சிரத்தையோடு தேடும்போதே மனிதவாழ்வு செழிப்படையும். மனிதன் மனிதனாகின்றான். இதனையே இரண்டடியில் இனிதே தருகிறார் வள்ளுவர் பெருந்தகை.**

“விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல்
கற்றாரோடு ஏனையவர்”

என ஓர் உவமை மூலம் உணர்த்துகின்றார். வாழும்பொருளாம் கல்வியறிவுடையோரே மனிதர் என்றும், கல்வியறிவு அற்றோர் விலங்குகள் என்றும் கூறுகின்றார்.

மனிதனை மனிதனாக மாற்றும் சிறப்புடைய கல்வியைப் பெறுவதற்கு காட்சி அனுபவம். கேள்வி முதலிய வழிகள் உள்ளபோதும்,அவற்றுள் சிறந்து விளங்குவது நூல்களே ஆகும். அந்நூல்களும் பொருளுணர்ந்து வாசிக்கும் பழக்கத்தாலே பயன்கொள்ளப்படுகின்றது. எனவே வாசிக்கும் பழக்கம் ஆணிவேராகவும்,அடித்தளமாகவும் காணப்படுகின்றது.



“இளமையிற் கல்வி சிலையில் எழுத்து”என்பது உளவியல் சார்ந்த ஒரு முதுமொழி. மன விசாரங்களும் மனவிகாரங்களும் அற்ற இளமைப்பருவத்தில் கற்கும் கல்வி சிந்தாது, சிதறாது, சிதையாது மனதிலே பசுமரத்தாணி போல் பதியும். எனவேதான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்விக்கு அடித்தளமாக அமையும் வாசிப்பு பழக்கம் இளமையிலேயே அரும்பி வளர்ந்து முதிரச்சி பெறுதல் வேண்டும். அதனாலேயே புதிய கல்விக்கொள்கையில் வாசிப்புக்கு அதி முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது.

மாணவர்கள் மொழியாற்றலில் முன்னேற்றம் காண்பதற்கு முதனிலையாகவும், முதன்மை நிலையாகவும் வாசிப்பு அமைகின்றது. நூல்களைப் பிழையின்றி வாசித்தல். கருத்தை விளங்கிக்கொள்ளல். விளங்கிய கருத்தை வெளிப்படுத்தல் ஆகிய முத்திறனும் மொழித்தேர்ச்சியில் அடங்குவன. மாணவர் சிலர் பிழையற வாசிப்பர். ஆனால் கருத்தை விளங்கிக்கொள்ளமாட்டார்கள். சிலர் வாசித்து விளங்கிக்கொள்வார் ஆனால் விளங்கியதை வெளிப்படுத்தமாட்டார்கள். அவர்கள் கனவு கண்ட ஊமைகள் போன்றவர்கள். எனவே வாசித்தவற்றை விளங்கிக்கொண்டு அவற்றை வெளிப்படுத்தும் ஆற்றலே மெய்யான மொழியாற்றலாகும். முறையான மொழியாற்றல் கைவரப்பெற்ற மாணவனின் பேச்சில் தெளிவும் கருத்தாழமும் காணப்படும். உள்ளங்கை நெல்லிக்கனி போல் எந்தக்கருத்தையும் தெளிவாகப் பிறர் விளங்கிக்கொள்ளுமாறு உரைப்பான். அவனது எழுத்துநடை எளிமையும், இனிமையும், தெளிவும், கருத்தாழமும், வழுவின்மையும் கொண்டதாக அமையும். வாசிப்புப்பழக்கம் உள்ள மாணவன் ஒருவனுடைய கட்டுரைகள் அவ்வாற்றலற்ற மாணவன் ஒருவனின் கட்டுரையுடன் ஒப்பிட்டு நோக்கின் உண்மை புலனாகும். அன்றியும் செம்மையான வாசிப்புத்திறன் பெறாத மாணவன் பள்ளியில் பயிலும் பாடங்களில் சிறப்புநிலை அடைய முடியாதவாறு திண்டாடுகின்றான். குறிப்பாக கணிதம், விஞ்ஞானம் போன்ற பாடங்களை கற்கும் மாணவர்கள் விவேகியாக இருந்தும் அவர்களுடைய சீரற்ற வாசிப்புத்திறன் காரணமாக அவர்களின் பாடநூல்களையோ அவை சம்மந்தமான வினாக்களையோ விரைந்து விளங்குமாற்றல் அல்லாது திண்டாடு கின்றார். எனவே வாசிப்பு பாடசாலைகளில் மாணவர்கள் திறமைகாட்ட இன்றியமை யாததாகும்.

பாடசாலையில் பயிலும் பாடங்களோடு மாத்திரம் மாணவர்களின் கல்வி முற்றுப்பெறுவதில்லை. கரையற்ற கல்விக்கடலிலுள்ள சின்னஞ்சிறு துளியே அவர்கள் கற்கும் கல்வி. அக்கல்வியில் ஒரு மாணவனது அறிவு பெருகிவிடும் என்பது பகற்கனவு. எனவே மாணவன் பாடநூல்களைக் கற்பதோடு பிறபல நூல்களைத் தேடி வாசித்தல் வேண்டும். "கண்டது கற்க பண்டிதனாவான்" என்பது பழமொழி. நல்லனவென கண்டவற்றையும் கற்க வேண்டுமென அப்பழமொழி கூறுகின்றது.

வாசிப்புத்திறனிலே தேர்ச்சி பெற்ற மாணவனின் உள்ளம் தணியாத பசிகொண்டதாக அமையும். எத்தனை நூல்களை வாசித்தாலும் அவனது பசி அடங்காது. மணிமேகலை என்னும் காப்பியத்தில் யானைப்பசி என்னும் நோய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்ட காயசண்டிகை என்பவள் எவ்வளவு உணவு எந்நேரம் கொடுத்தாலும் அடங்காத பசி கொண்டவள் என குறிப்பிடப்படுகின்றாள். அவ்வாறே ஒவ்வொரு மாணவனும் காயசண்டிகையின் உணவுப்பசிபோல் வாசிப்பில் பசிகொண்டிருந்தால் அவனது உயர்வும் உறுதுணையாக இருக்கும். அன்றேல் தானாகவே கிணற்றுத்தவளை நிலைக்கு சென்றுவிடுவான். ஆழமற்ற அறிவுடையவனாவான்.

மாறாக மாணவன் வாசிப்பில் கவனம் செலுத்துவானாகில் அறிவால் மட்டுமல்ல உள்ளத்தாலும் உயர்ந்தவனாகின்றான். வாழ்வினையும் வாழ்வின் விழுமியங்களையும் பலப்படுத்தும் இலக்கியம். கட்டுரை,கவிதை முதலியவற்றைப் படிப்பதால் வாழ்வில் தான் கண்டறியாத புதிய குணாதிசயங்களை உணர்கின்றான். பல கோணங்களில் வாழ வைக்கின்றான். பற்பல புதிய விடயங்களைப் பெறுகின்றான். நல்லவை எவை? என பாகுபடுத்தக்கூடியவனாகின்றான்.

இதனால் அவன் உள்ளம் விரிவடைகின்றது. எதிர்கால வாழ்வில் தம்மைத்தயார் செய்யும் உன்னதநிலை உருவாகின்றது.மாணவர்களே எதிர்காலத்தின் சிற்பிகள், நாட்டின் தூண்கள், எதிர்கால குடிமக்களும் அவர்களே தான். அவர்கள் அறிவுச்செல்வத்தால் உள்ளத்தில் உயர்ந்து உருவாக வேண்டுமேயானால் வாசிப்புத்திறனை விருத்தி செய்ய வேண்டும். வாசிப்புத்திறன் கைவரப்பெற்ற மாணவன் கல்விக்கடலைக் கடந்தவனாகின்றான். முழுமையான மனித வளர்ச்சிக்கு தன்னைத்தானே ஆயத்தமாக்கியவனாகின்றான்.

எனவே மாணவர்களாகிய நீங்கள் நிகழ்கால விதைகள், எதிர்கால விருட்சங்கள், என்பதை உணர்ந்து வாசிப்புத்திறனை வளர்த்து வாழ்க்கையெனும் நீண்ட பயணத்தினைக் கடப்பீராக.

**"நல்ல நூல்களை-நாளும்**
**கற்போம், ஒழுகுவோம்"**

**பொதுநூலகம்,**
*கரைச்சி பிரதேசசபை,*
*கிளிநொச்சி.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் நூலகத்தின் பங்களிப்பு

"நல்ல நூல்களைப் படிப்பதால் நமக்கு இனிமைதரும்"என்று தமிழின் அறிவுப்பொக்கிசமான அரும் பெரும் நூலான திருக்குறள் கூறுகின்றது. எமது நாட்டில் இலவசக்கல்வி 1945ஆம் ஆண்டு C.W.W.கன்னங்காரவினால் ஆரம்பித்து வைக்கப்பட்டது. அதற்கு ஏற்ப ஆலமரத்தின் விழுதுகள், கிளைகள் போல மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் நூலகம் தனிமரமாக வேரூன்றி நிற்கின்றது என்றால் மிகையாகாது.

"ஒரு நூலகம் திறக்கப்படும் போது பல சிறைச்சாலைகள் மூடப்படுகின்றன"என்பது ஒரு முதுமொழியாகும். இன்று நவீன கல்விச்சீர்திருத்தத்தின் படி மாணவர்கள் படிப்பதில்லை. நவீன விஞ்ஞான வளர்ச்சியினால் மாணவர்கள் அறிவு வளர்ச்சிகளை தேடிப்படிப்பதால் ஆர்வம் காட்டுகின்றார்கள். ஆனாலும் எமது நாட்டில் பெரிதாக விஞ்ஞானம் வளர்ச்சியடையவில்லை. என்றாலும் மாணவர்கள் காலத்தின் தேவை கருதி நூலகங்களுக்குச் சென்று படிக்கின்றார்கள்.

நாம் சாகும் போதும் நம்முடன் கூடிவருவது., விழும் போது ஊன்றுகோலாகக்காப்பது அறிவு விடயங்களை தருவது, இலக்கியரசனை, சென்ற இடம் எல்லாம் சிறப்பு பெறுவது என்று எல்லாம் மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் நூலகம் முக்கியம் பெறுகின்றது. இதனை வான் புகழ் வள்ளுவர் பெருந்தகை.

"தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத்தூறும் அறிவு "

என்று கல்வியின் சிறப்பினை சிறப்பிக்கின்றார்.

மேலும் நூலகத்தின் வகிபங்கு பற்றி சற்று விரிவாக நோக்குவோம். எமது நாட்டில் பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட பாடசாலைகள் உள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பாடசாலைகள் அனைத்திலும் பாடசாலை நூலகம் அமையப்பெற்றுள்ளது. இதை விட மாவட்டப் பொதுநூலகம், சனசமூகநிலையம், பிரதேசநூலகம் எனவும் அமையப்பெற்றுள்ளன.



எமது பாடசாலை நேரஅட்டவனையிலும் நூலகத்திற்கு என்று ஒன்றோ அல்லது இரண்டு என்று பாடவேளைகள் ஒதுக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்க ஒன்றாகும். இதன் மூலம் மாணவர்கள் இயல்பாகவே நூலகத்திற்குச் சென்று பல்வகையான பத்திரிகைகள், உலகச்செய்திகள், சிறுகதைகள், பொது விடயங்கள் என பல விடயங்களை அறிந்து கொள்கின்றார்கள். இதன் மூலம் மாணவர்கள் மத்தியில் தேடல் திறனை விருத்தி செய்யும் நல்ல நண்பனாக நூலகம் திகழ்கின்றது.

மேலும் கல்வி அறிவு தினம், நூலக வாரம், வாசிப்பு தினம் போன்ற விசேட நிகழ்வுகளில் பிரதேச பொது நூலகர்கள் பாடசாலைக்கு வந்து அது பற்றிய விழிப்புணர்வுகள், போட்டிப்பரீட்சைகள், கட்டுரைவரைதல் போன்றவற்றை நிகழ்த்துவதால் மாணவர்கள் உடனடியாகவே நூலகத்திற்குச் சென்று நூல்களைப் படிக்க முன்வருகிறார்கள். அதுமட்டுமன்றி வாசிப்புத் திறனை விருத்தி செய்தல். பொது அறிவினை அறிந்து கொள்ளுதல். விஞ்ஞான விந்தைகளை அறிந்து கொள்வதற்கும் மாணவர்கள் முன்னேற்றம் அடைவதற்கும் நூலகங்கள் ஏதுவாகின்றன.

"கற்றது கைம்மண்ணளவு கல்லாதது உலகளவு" என்பதற்கு இணங்க அனைத்து நூலகங்களிலும் கணினி ஆய்வு கூடங்களை அமைத்துள்ளார்கள். குறிப்பாக எமது கிளிநொச்சி பிரதேச பொது நூலகத்தில் அவ்வசதியினை ஏற்படுத்தியுள்ளார்கள். இதனை அனைத்து மாணவர்களாலும் வரவேற்கத்தக்கதாகும். இன்று வெகுசனத்தொடர்பு சாதனங்களான வானொலி, தொலைக்காட்சி, ஈமெயில், மின்னஞ்சல், சமூக வலய இணையம் என்பன அதிகரித்துள்ளன. இத்தகைய வெகுசனத் தொடர்பு சாதனங்களைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயன்படுத்துவதில் மாணவர்களும், இளம் தலைமுறைகளும், முதியவர்களும், அதிகம் முனைப்புக்காட்டுகின்றார்கள்.

மேலும் இச்சாதனங்கள் மூலம் உலகத்தில் இடம் பெறும் புவிநடுக்கம், எரிமலைவெடிப்பு, சூறாவளி, சுனாமி போன்றவற்றை உடனுக்குடன் அறிவதுடன் அவ் இயற்கை அனர்த்தங்களில் இருந்து எம்மையும் எமது உடமைகளையும் பாதுகாத்துக்கொள்ள முடிகின்றது. சகல விடயங்களையும் அறிந்து கொள்வதற்கு நல்ல அத்திபாரமாகக் காணப்படுகின்றது. மேலை நாடுகளில் (LCD,DC)மாணவர்களுக்கு கணினியில் கல்வியினைக் கற்கும் முறை காணப்படுகின்றது. இன்று பல்கலைக்கழகங்களில் மாணவர்களுக்கு விரிவுரையாளர் ஒரு வழிகாட்டியாக மட்டும் தான் உள்ளார். ஆனால் மாணவர்கள் தமக்குப் படிப்பதற்கு ஏற்ற புத்தகங்கள், செய்திகள் என்பவற்றை நூலகங்களிலே தேடிப் பெறுகின்றார்கள். என்பதும் இங்கு குறிப்பட்டுக் கூறியதில் ஒன்றாகும்.

"விலங்கொடு மக்கள் அனையர்
இலங்கு நூல் கற்றோரோடு ஏனையவர்"

"கண்ணுடையர் என்போர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர் "

என்று உலகப்பொது முறையாக விளங்கும் திருக்குறள் கூறுகின்றது. அதாவது கற்றவர்கள் சிறப்புடையவர், கல்லாதவர் விலங்குகள் என்றும் கற்றவர்கள் கண்கள் உடையவர் என்றும் கல்லாதோர் முகத்தில் இரண்டு புண்களை உடையவர் என்றும் கூறுகின்றார்.

இவ்வாறாக இன்று எமது நாட்டிலும் பாடசாலைகளிலும், கிராமங்களிலும் கட்புல, செவிப்புல சாதனங்களுடன் திகழ வேண்டும். அத்துடன் எமது கல்வியின் வளர்ச்சியில் மிகப்பெரிய பங்கினை நல்ல நண்பர்களாக விளங்கும் நூல்களும், நூலகங்களும் விளங்குகின்றது என்றால் மிகையாகாது.

"நல்ல நூல்களைக் கற்போம்
அதன்படி ஒழுகுவோம் "

**நெ.ஜெசிந்தா**

*கிளி/ புனித திரேசா பெண்கள் கல்லூரி*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கரைச்சி பிரதேச சபை நிர்வாக, நூலக உத்தியோகத்தர்கள்



படத்தில் :

திருமதி. சசிகலா இரவீந்திரராசா நூலகர் , கௌரவ உறுப்பினர் கந்தையா கணேசலிங்கம், திரு.தர்மலிங்கம் நிசாந்தன் பொறுப்பதிகாரி , கௌரவ உப தவிசாளர் சின்னையா தவபாலன், திரு.கார்த்திகேசு சண்முகதாசன் செயலாளர், கௌரவ தவிசாளர் அருணாசலம் வேழமாலிகிதன், திரு.வேலாயுதம் லவேந்திரா நூலகர், அழகேந்திராசா சசிகுமார் சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர், திருமதி.சிவதர்சினி செந்தூரன் நூலகர் திரு.இராசேந்திரம் சசிகரன் நூலக உதவியாளர், திருமதி.ஜெயசூரியகலாராணி முருகாண்டி ,திருமதி .பபிதா சிறிகாந்தன் நூலகர், திருமதி.அஜந்தா மதனராஜ் நூலக உதவியாளர், திருமதி.விஜயநந்தினி நந்தகுமார் பிரதம முகாமைத்துவ உதவியாளர், திருமதி.கஜானி ஜசந்தன் , திருமதி.சுபைதா ஆனந்த் நூலக உதவியாளர், திருமதி. விஜயமாலா பேரின்பநாதன் நூலக உதவியாளர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தேசிய வாசிப்பு மாத வெளிக்கள நிகழ்வுகளின் பதிவுகள்......2019



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தேசிய வாசிப்பு மாத வெளிக்கள நிகழ்வுகளின் பதிவுகள்......2019



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பசுமை



ஆலமரத்தடியில் அமர்ந்திருந்து சுற்றும் முற்றும் அந்தப் பெருவெளியை வெறித்துப் பார்த்தாள் அனுரா. என்ன ஆச்சரியம், அவளது வாழ்க்கை போலவே இயற்கை அன்னையின் போர்வையும் வறண்டு போயிருந்தது. ஏக்கப்பெரு மூச்சு விட்டபடி தான் எடுக்க விருக்கும் முடிவு ஆரோக்கியமானதா? என சிந்தித்தவளின் மடியைத் தடவியபடி அவளது நான்கு வயது மகன் ஆகாஷ் நின்று கொண்டிருந்தான். "அம்மா அம்மா பசிக்குது, பால் தாங்க"

என்று கெஞ்சிக்கொண்டிருந்த மகனின் தலையை நீவிவிட்டபடி தன் கடந்த காலத்திற்கே நினைவலைகளைக் கொண்டு சென்றாள் அனுராதா.

தந்தியறுந்த வீணையாய் மீட்ட யாருமின்றி புழுதி மண்டிக்கிடந்த அவளது வாழ்க்கை இராகங்களை மீட்டிப்பார்த்தவன் அவளது அருமைக் கணவன் அருண்பாண்டியன். பல்கலைக் கழக மேடையிலே அவள் இசைத்த இராகங்கள் கலைஞனான அவனை அவளது வாழ்க்கை இராகங்களை மீட்ட வைத்திருந்தது. தோடி மட்டுமே மீட்கப்பட்டுக் கொண்டிருந்த அவளது வறுமை வாழ்க்கை பூபாளத்தையும், ஆரபியையும் ஆரத்தழுவியது. குதூகலமான மணவாழ்வு ஆகாஷ் என்ற அழகிய மொட்டொன்றை கைகளிலே அள்ளிக்கொடுத்தது. சந்தோசப்பூங்காவில் கணவனின் கைத்தாங்களிலே வலம் வந்த அனுராதா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடியான செய்தி ஒன்றை ஏற்கப்போகிறாள் என்று இதயமற்ற இறைவன் கூட அன்று நினைக்கவில்லை.

வன்னி நிலப்பரப்பை போர் மேகங்கள் சூழ்ந்து கொண்டு எறிகணை மழையை அள்ளி வீசிய யுத்த காலப்பகுதி அது. ஊர்விட்டு ஊரோடி இருக்க இடமின்றி கூடாரங்களைக் காதலித்திருந்த காலமது. பதுங்குகுழியே வாழ்க்கை என்றான போது மனைவி அனுராதாவையும் மகன் ஆகாஷையும் பாதுகாப்பாக பதுங்குகுழிக்குள் இருத்திவிட்டு பால் கேட்டு அழுத மகன் ஆகாஷிற்கு பாலை எடுத்துவர வெளியே வந்த அருண் கூடாரத்தின் மேலே கும்மாளமிட்டிருந்த எறிகணை அரக்கனிற்கு பலியாகிவிட்டிருந்தான். உயிரைத் திருடி, உடலை சல்லடையிட்டு உறுப்புக்களை கிள்ளியெறிந்து அவன் ஆடிய கோரத்தாண்டவம் சொல்லிலடங்காது. அவன் பொட்டிட்ட நெற்றியிலிருந்த பொட்டையும், பின்னலிட்ட சடையை அலங்கரித்த பூவையும் எடுத்தவள். இன்று இந்த நொடி வரையும் தனிமை என்ற போர்வையைப் போர்த்தி, இயற்கை என்ற காப்பரணிற்குள் அடக்கமாக வாழ்ந்து வருகின்றாள்.

கற்பைக் களவாடும் காமுகரும் எள்ளி நகையாடும் ஈனப்பிறவிகளிற்குமிடையே வாழ்வது என்பது துயரமான நிலையாயினும், தமிழர் பண்பாடானது அவளை அணிகலன்களாக பாதுகாத்திருந்தது. இளமை துள்ளி விளையாடும் இளம் பருவத்திலே கணவனைக் கைவிட்டிருந்தாலும் அடக்கம் என்ற அணிகலனும் ஆறுமுழச்சேலையும் அவளை சோலையாகப் பாதுகாத்தன. விதவை என்ற மூன்றெழுத்து மட்டும் அவளிற்கு கிடைத்த இக்காலப் பரிசானது. உற்றோரும் பெற்றோரும் ஆதரிக்க மறுத்த நிலையில் சிறுகுடில் அவளது வாழ்விடமானது. ஆனால் கற்றிருந்த கல்வி மட்டும் அவளைக் கைவிட மறுத்துவிட்டது. மூன்று வேளையும் உணவருந்தி மகனைப் படிப்பித்து நல்ல நிலைமைக்கு கொண்டுவரவேண்டும் என்ற நல்ல எண்ணம் மட்டுமே மனதிலே வரித்திருந்தமையினால் அவள் தொழில் செய்ய விரும்பி தொழிலையும் தேடிக்கொண்டாள். பாரதி கண்ட புதுமைப் பெண் என்றும் அவளை கூறிக்கொள்ளலாம். தப்பேதும் தென்படாது.

காலங்கள் உருண்டோடின. காலவோட்டம் கடிவாளத்தை வேகமாக விரட்டி நகர்த்திக் கொண்டிருந்து தொழிலும் வீடும் என்று வாழ்ந்து வந்த அனுராதா வாழ்க்கையிலே நித்திஷ் என்ற ஆடவன் குறுக்கே வந்தான். பொட்டிழந்த நெற்றியும், பூவிழந்த தலையும்,வெண்மையான சேலையும் புதுப்பொலிவினைப் பெறப்போவதை அனுராதா அறிவாளா? இறைவனின் தீர்ப்பு இதுவென்றால், நாம் என்னதான் செய்ய முடியும். அனுராதா குடியிருந்த வீட்டிற்கு எதிர் வீட்டிலே குடி வந்த நித்தீஷ் அவளது திணைக்களத்திலே மேலதிகாரியாக கடமையைப் பொறுப்பேற்று அலுவலகமும் வந்திருந்தான். எத்தனையோ அதிகாரிகள் வருவார்கள், போவார்கள். அப்படித்தான் நித்தீஷையும் அன்று எண்ணியிருந்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்று அதிகாலை வழமை போலவே தன் கரங்களை நீட்டி கதிரவன் எழுந்துவந்த போது நேரம் எட்டு மணியைத் தாண்டிவிட்டது தெரிய வர வேகவேகமாக உந்துருளியை எடுத்துக்கொண்டு அலுவலகம் வந்து சேர்ந்தவள். தான் பணிபுரியும் கிளையில் மேலதிகாரி நித்தீஷ் நின்று கொண்டிருப்பதைக் கண்டு திகைத்து போனாள். "வணக்கம்" என்ற ஒரு வார்த்தை மட்டும் வரண்டு போய் வந்திருந்தது.பதிலுக்கு வணக்கம் சொன்ன நித்தீஷ் அவளது தோளைப் பற்றி கதிரையிலே அமரவைத்து பதிலுக்கு ஏதோ சொல்ல வந்தவளை தடுத்து நிறுத்தினான். "இங்க பாரு அனுராதா, என்னை மேலதிகாரியாக மட்டும் பார்க்காதே, நான் சொல்ல வந்ததை நிதானமாக கேள், உனக்கு எது சரியென தோன்றுகிறதோ அதனைச்செய், நான் உன்னை வற்புறுத்தவில்லை" என்று கூறி அவளைக் காதலிப்பதையும் வாழ்நாள் வரையும் அவளைக் கரம் பற்றி கூட்டிப்போவதையும் தெரிவித்தான். அனைத்தையும் கேட்டு முடித்த அனுராதாவிற்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. தலை சுற்றுவதையும் இந்திரனால் தீண்டப்பட்ட அகலிகையின் மனோநிலையையும் அன்று அவள் அனுபவித்தாள். மெல்லவும் முடியாது, விழுங்கவும் முடியாது திண்டாடினாள். பாதி நேரத்திலேயே வீட்டிற்கும் வந்துவிட்டாள்.

வீட்டிற்கு வந்த அனுராதாவால் எதையுமே சிந்திக்க முடியவில்லை. தான் எடுக்கவிருக்கும் முடிவு குழந்தையின் எதிர்காலத்திற்கு பாதகமாக அமைந்து விட்டால்.........., பலவாறாக சிந்தித்தாள். இறுதியில் குழந்தையின் அழுகுரல் வானைப்பிளக்க சுயநிலைக்கு வந்தவள் "ஆகாஷ் குட்டி என்ன வேனும், ஏன் அழுகிறீங்கள்?" என்று அணைத்து முத்தமிட்டபோது "எனக்கு அப்பா வேனும் அப்பா வேனும்" என்று குழந்தை அழுவது கலங்கிய கண்களிடையே மங்கலாய்த் தோன்றியது. அப்போது வானிலே கருமேகம் சூழ்ந்து இடியொலிகள் வானைப் பிளக்கத்தொடங்கின. ஓரிரு மழைத்துளிகள் உடலிலே பட்டு பரிஷத்தைத் தூண்டிவிட்டிருந்தன. ஓ! இது மாரிகாலம், வரண்டிருந்த வயல் நிலங்கள், பெருவெளிகளுக்கு இயற்கை அன்னை பச்சைக் கம்பளத்தை பரிசளிக்கும் காலம் என்று மனதிற்குள் எண்ணியவளாய் குழந்தையையும் அணைத்தபடி எழும்பி நடந்த போது அவளது வலக்கரம் நித்தீஷால் பற்றப்பட்டிருந்தது. உதறிவிட மனமின்றி ஓரக்கண்ணால் சிரித்தவாறு நித்தீஷீடன் சேர்ந்து நடக்கலானாள். பற்றியிருந்த கைகள் அனுராதாவின் தோள்களை அணைக்க, குழந்தை ஆகாஷ் நித்தீஷின் நெற்றியிலே அன்பு முத்தமிட்டான். "அப்பா" என்ற ஒற்றை வார்த்தை உதிர்க்கப்படும் போது மழையும் சோவெனக்கொட்டத் தொடங்கியது. இன்று மட்டுமல்ல என்றுமே அனுராதாவின் வாழ்க்கை பசுமைதான் இயற்கை அவளைத் தாலாட்ட இதமான இராகங்கள் பழையபடி மீட்டப்பட்டன.

**திருமதி.ப.அனுசியா**
*தொண்டமான்நகர்,*
*கிளிநொச்சி.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அமைதி

நடந்தவை அனைத்தும்
நேற்றே நடந்தன.
நடப்பவை இன்றைய
நடப்பின் எதிரொலி
நாளைகள் வாழ்வின்
நிச்சய வெற்றிகள்
மனமே நீ இன்று
அமைதி கொள்வாய்
கிடைத்தவை எல்லாம்
கேட்டா வந்தவை?
பிரிந்தவை எல்லாம்
சொல்லியா சென்றவை?
இருப்பதை இழப்பதும்
இழப்பதைப் பெறுவதும்
இயற்கையின் நியதி
மனமே நீ இன்று
அமைதி கொள்வாய்.
சொல்லில் சுத்தம்
செயற்கையில் தூய்மை
உயர்வினில் அடக்கம்
தாழ்வினில் பொறுமை
அணிந்த மனிதன்
அற்புத மனிதன்
அடைவான் நிம்மதி
மனமே நீ இன்று
அமைதி கொள்வாய்.
ஏதோ பிறந்தோம்
ஏனோ வளர்ந்தோம்
என்பது கொள்கையாய்
எப்படி வாழ்வாய்?
கிடைத்த பிறவி
அடைந்ததெம் பெருமை
மனிதனாய் வாழ்ந்து
மனிதனாய் மடிவது
ஒன்றே நோக்கமாய்
ஒப்பற்ற பண்புடன்
ஒருமுறை வாழ்ந்து பார்
மனமே நீ இன்று
அமைதி கொள்வாய்.

**அனிஸ்ரன் மேரி அனிஸ்ரலா**
*கிளி/புனித திரேசா பெண்கள் கல்லூரி*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தேசிய வாசிப்பு மாத உள்ளக நிகழ்வுகளின் பதிவுகள்.....2019



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் கல்வியில் நூலகத்தின் பங்கு

"கற்க கசடற கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக"

கல்வி என்பது நடத்தையில் ஏற்படுகின்ற மாற்றம் எனக் கூறினார். அந்த நடத்தை மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு தேடல் முக்கிய இடம் வகிக்கின்றது. இத்தேடலுக்கு களம் அமைத்துக் கொடுப்பதில் முக்கிய இடம் பெறுவது நூலகமாகும். மனிதன் மனிதனாக மதிக்கப்பட வேண்டுமாயின் அவன் கல்வியறிவுள்ளவனாக இருக்க வேண்டும். இதற்கு நூல்கள் அறிவுள்ள அரசனாக அமைந்திருக்கின்றன. இதற்கு நூலகத்தின் பங்களிப்பு பெருமிதமாக காணப்படுகின்றது.

"கற்கை நன்றே கற்கை நன்றே
பிச்சை புகினும் கற்கை நன்றே"

என வெற்றிவேற்கை தந்த அதிவீரராமபாண்டியர் பாடியுள்ளார். இப்பாடல் கல்வியின் அவசியத்தைப்பற்றி பிரதிபலிக்கினறன. அதேமாதிரி சிறுவர்களாகிய எமக்கு நூலகம் பல பங்களிப்புக்களைச் செய்கிறது. "கல்வி அழகே அழகு" என்கிறது நாலடியார். நூலகம் எமது அறிவுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல பங்களிப்புக்களைச் செய்கிறது. மாணவர்களாகிய எமக்கு நூலகம் ஒழுக்கத்தையும் பண்பையும் கற்றுத்தருகின்றது.

அனைவருக்கும் கல்வி என மகாத்மாகாந்தி கூறியது இன்று உலகநாடுகள் அனைத்திலும் ஓங்கி ஒலிக்கும் குரலாக இருக்கிறது. இதற்கு நூலகத்தின் பங்களிப்பு அதி உயர்ந்ததாக காணப்படுகின்றது. சிலர் வறுமை, அறியாமை, அலட்சியம், பணம் இல்லாமை போன்ற காரணங்களால் பிள்ளைகளின் கல்வியில் கவனம் செலுத்தாது விடுகிறார்கள். பாடசாலையில் இணைந்து படிப்பதற்கு பணம் தேவை என்பதால் பிள்ளைகளின் கல்வி தூர்ந்து போகக்கூடாது. ஒவ்வொரு கிராமத்திலும் இலவச வைத்தியசாலைகள் உள்ளது போல பணம் செலுத்தாமல புத்தகங்களை வாசிக்க கூடிய நூல்நிலையங்கள் உருவாக வேண்டும். தற்போது உருவாகியும் உள்ளன. பிள்ளைகளும் ஒவ்வொருநாளும் காலை அல்லது மாலை முப்பது நிமிடங்களாவது புத்தகங்கள் பத்திரிகைகள் போன்றவற்றை வாசிக்க அனுமதித்தால் பிள்ளைகளின் அறிவு தானாகவே வளரும்.

சிறுவர்களின் இளமைக்கல்வியில் நூலகத்தின் பங்களிப்பு அதிகமாகிச்செல்கிறது. மாணவர்களின் தலையாய கடமைகளான பணிஒழுக்கம், பிறர் நலன் பேணல், நல்வாழ்வு பெறல் போன்றவற்றை நூலகத்தில் இருந்து கற்கமுடியும். தரம் 6 தொடக்கம் உயர் தரம் வரையிலான வகுப்புகளிற்கு நூலகம் ஒரு பாடமாக கருதப்படுகிறது.

"நல்ல நல்ல நூல்களே நமது நல்ல நண்பராம்
நல்ல நல்ல நூல்களை நாமும் நண்பராக்குவோம் "

கல்வியில் முழுமையான வெற்றிகளைப் பெறுவோம். அரசும் சமூக நலன் விரும்பிகளும் இதனைக் கருத்திற்கொண்டு செயற்பட வேண்டும். சிறுவர்களின் கல்வியில் நூலகத்தின் பங்களிப்பை உயர உரைப்பதே நமது கடனாகும்.

**மோ.புகழினி**

*கிளி/கிளிநொச்சி மகா வித்தியாலயம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொழில்நுட்ப வளர்ச்சியில் நூலகம்

நூலகம் என்பது பொது அமைப்புக்களால், நிறுவனங்களால் அல்லது தனிநபர்களால் உருவாக்கப்பட்டு பேணப்பட்டு வருகின்ற தகவல் மூலங்களின் சேமிப்பாகும். மரபுரீதியில் இதனை நூல்களின் சேமிப்பு நிலையம் என்பர். எண்ணற்ற தகவல் மூலங்களை அல்லது நூல்களை சொந்தமாகச் சேமித்து வைக்க முடியாதவர்கள் நூலகத்தைப் பயன்படுத்துகின்றார்கள். மேலும் இவ்வளவு நூல் மூலங்களை தனிநபர் ஒருவரால் சேமித்து வைப்பது என்பது இலகுவான விடயமல்ல.

முதலில் நாம் நூலகத்தின் தோற்றத்தினையும் அதன் வளர்ச்சியையும் நோக்குவோம். சில ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் (கி.மு 3500-கி.மு1500) மொசப்பத்தேமியாவில் வாழ்ந்த மக்கள் களிமண் தட்டுகளில் எழுதியவற்றை "தீப்பூர்" ஆலயத்தில் சேமித்து வைத்தனர். இதுவே உலகின் முதலாவது நூலகம் என வரலாற்றாய்வாளர்கள் கூறுகின்றனர். பின்னர் எகிப்தில் வாழ்ந்த மக்கள் கி.மு300ஆம் ஆண்டில் அலெக்சாண்டிரியாவில் "பப்பிரஸ்" புல்லில் எழுதிய 700000 சுருள்களை கொண்ட கருவூலம் ஒன்றை அமைந்திருந்தனர் இதுவே இன்றைய நவீன நூலகத்தின் முதல்மாதிரியாக கொள்ளத்தக்கது. பின்னர் 1400 ஆம் ஆண்டு ஒக்ஸ்போட் பல்கலைக்கழகம் நிறுவிய "போட்லின்" எனும் நூலகம் உலகின் முதலாவது மிகப்பெரிய பல்கலைக்கழக நூலகமாக அப்போது காண்ப்பட்டது. பொது நூலகங்களை நிறுவும் சட்டமூலம் இங்கிலாந்து பாராளுமன்றத்தில் முதன் முதலில் 1850 ஆம் ஆண்டு நிறைவேற்றபட்டது.

இவ்வாறு ஆரம்பமான நூலகம் தொழில்நுட்ப வளர்ச்சியில் வளர்ந்துள்ள விதத்தினை படிமுறை ரீதியாக நோக்குவோம்.

1. புதிய தொழில்நுட்ப துறை சார்ந்த வகைப்படுத்தல்கள்.
2. நூல்களுக்கு மேலாக மின்னியலில் துறைசார்ந்த நூல்கள் (இறுவட்டு, குறுவெட்டு, ஒலிநாடா) காணப்படுகின்றமை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. கணினி மயப்படுத்தப்பட்ட தகவல்தொகுப்பு
4. இணைய நூலகம்
5. நூலகத்தில் கணினி வசதியுடனான இலவச இணைய வசதி

நூலகம் தற்போது தொழில்நுட்ப வளர்ச்சிக்கேற்ப தன்னை மாற்றிக்கொண்டுள்ளது. அந்த வகையில் தொழில்நுட்ப அறிவியல் துறைகள் தோற்றம் பெற்று வளர்ச்சியடையும் போது அதன் பிரிவுகளும் அது சார்ந்த தகவல் மூலங்களின் சேமிப்பு பிரிவுகளும் நூலகத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ளன. மேலும் நூலகத்தின் நூல்கள் அனைத்தும் ஒரு சர்வதேச பொது இலக்கமிடல் முறை மூலம் அனைத்து நூலகங்களும் விஞ்ஞானம் வகைப்படுத்தல்களுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. மேலும் நூலக விஞ்ஞானம் **(Library science)** எனும் பிரிவு பட்டப் படிப்பாகவும், டிப்ளோமாகவாகவும் பல்வேறு நாடுகளில் கற்பிக்கப்பட்டு வருகின்றது.

ஆரம்ப காலங்களில் நூலகத்தில் அச்சுப்பிரதி நூல்களும் சஞ்சிகைகளும் மாத்திரமே காணப்பட்டன தொழில்நுட்ப வளர்ச்சியால் மின்னியல் துறைசார்ந்த



நூல்களான இறுவட்டு, குறுவட்டு, ஒலிநாடா போன்றவற்றை தகவல் மூலங்கள் சேமிக்கப்பட்டு பயன்பாட்டாளருக்கு வழங்கப்பட்டு வருகின்றன. இது இன்றைய தொழில்நுட்ப வளர்ச்சியில் நூலகம் வளர்ந்து வரும் ஒரு படிமுறையாகும்.

நவீன வெளிநாட்டு நூலகங்களில் சேமிப்பிலுள்ள நூல்கள் அனைத்தும் கணினியில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன. நூலக வாசகர்கள் வரவேற்பறையிலுள்ள கணினியில் நூலின் பெயர் அல்லது குறியீட்டு இலக்கத்தை பதிவு செய்தால் அந்நூல் எந்த பிரிவில், எத்தனையாவது இலக்க அலுமாரியில், எந்த திசையில், எத்தனையாவது அடுக்கு வரிசையில் எத்தனை புத்தகங்கள் உள்ளன போன்ற தகவல்களையும் பெறக்கூடியதாக இருக்கும். இதன் மூலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேரவியல் வெகுவாகக் குறைக்கப்படுவதுடன் நூல் தொடர்பான தெளிவான தகவல்களையும் பெறக்கூடியதாக இருக்கும்.

தொழில்நுட்பம் இன்று உச்ச வளர்ச்சியை அடைந்துள்ள இவ்வேளையில் நூலகமும் தனது வளர்ச்சியை தொழில்நுட்பத்துறையோடு இணைந்ததாகவே வளர்த்துள்ளது என்றே கூற வேண்டும். அந்த வகையில் இணையநூலகம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் எமக்குத் தேவையான நூல்களை வீட்டிலிருந்தவாறே தரவிறக்கம் செய்து வாசிக்க கூடியதாக இருக்கும். இதற்கு பல இணைய நூல்கள் உள்ளன. உதாரணமாக:- **"Noolagam.com"** என்ற இணையத்தளத்தில் எமக்குத்தேவையான பல நூல்களை பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்கும். மேலும் பலநூலகங்கள் தமது இணையப்பக்கத்தில் முக்கியமான நூல்களை தரவேற்றம் செய்துள்ளன. கொழும்பு தமிழ்ச்சங்க நூலகம் இவ்வாறு பல நூல்களை தரவேற்றம் செய்துள்ளதை நாம் ஒரு எடுத்துக்காட்டாக கொள்ளலாம்.

இவ்வாறு தொழில்நுட்பத் துறையில் நூலகம் வளர்ச்சியடைந்துள்ளது. இது அபிவிருத்தி அடைந்த நாடுகளில் சிறப்பாகவும் அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் சற்று குறைவாகவும் காணப்பட்டு வருகின்றது. மேலும் தொழில்நுட்ப வளர்ச்சியில் நூலக கட்டடங்களுக்கு வருகை தருவோரின் எண்ணிக்கை வெகுவாக குறைந்துள்ளதை நாம் காணக்கூடியதாக இருந்தாலும் அனைவரும் ஏதோ ஒரு வகையில் நூலகத்தைப் பயன்படுத்துகின்றார்கள் என்பதே உண்மை. இனி வரும் தொழில்நுட்ப வளர்ச்சியில் நூலகங்கள் இன்னும் நவீன மயப்படுத்தப்படும் என்பதோடு அதன் பயன் அதனைப் பயன்படுத்தும் மக்களுக்கு திருப்தி கரமானதாக இருக்கும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

அனைத்து துறைகளும் தொழில்நுட்ப வளர்ச்சியில் முன்னேற்றம் கண்டுள்ள நிலையில் நூலகத்துறையும் அதில் முன்னேற்றம் கண்டு வெற்றியடைந்துள்ளது. தொழில்நுட்ப வளர்ச்சி பாதகமான விளைவுகளைக் கொடுத்தாலும் நூலகத்துறையில் சாதகமான விளைவுகளையே அதிகம் தந்துள்ளது என்றே கூறவேண்டும். அந்த வகையில் தொழில்நுட்பம் நூலகத்துறைக்கு மிகப்பெரிய பங்களிப்பை செய்துள்ளது என்பது யாரும் மறுக்க முடியாத உண்மை.

**க.நிசாந்தினி**

*கிளி / கிளிநொச்சி மகாவித்தியாலயம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஆதியும் அந்தமும் இல்லா அரும் பெரும் சோதியையாம் பாடக் கேட்டே....." .......மெய்யுருகி நீர் வழியப்பாடிக் கொண்டிருந்தாள். கண்முன் இருந்த சிவனின் உருவம் அவள் முன் காணாமற் போன கணவன் தெய்வேந்திரனாகவே தெரிந்தது.

"என்ர.. ஐயா... எப்ப நீ வருவாய்... சொல்... என்னால ஏலுமட்டும் கடவுளை இறைக்கிறேன்.. இனி என்னால ஏலாதையா ..." ஒ வென்று கதறுகிறாள் வினோதா.

# அழியாத கோலம்



"அம்மா.. இப்ப கத்தப் போறியளா... எங்கயாவது போகட்ட.. நான்.." சத்தமிட்டுக்கொண்டு சுவாமி அறைக்குள் வந்தான் க.பொ.த. உயர்தரம் வணிகப்பிரிவில் கற்கும் மூத்த மகன் திவ்யன். தாய் தினந்தோறும் அழுது ஒப்பாரி வைப்பதைக் கேட்டு அவனுக்கு வாழ்க்கை வெறுத்த நிலையில் கொதிப்படைந்து இருப்பது தாய்க்கு தெரியும்.

கடவுள் பூமியில் மனிதராக அவதரிக்கச் செய்துவிட்டு எத்தனை ஆயிரம் சோதனைகளைக் கொடுக்கின்றான். அதுவும் ஒரு சில மனிதர்களை கடும் நரகக்குழியில் தள்ளிவிட்டு வேடிக்கை பார்க்கிறது. அந்தச் சாக்கடைக்குள் அமிழ்ந்து மீளமுடியாமல் தெய்வேந்திரன் குடும்பம் போன்று கிளிநொச்சியில் எத்தனை ஆயிரம் குடும்பங்கள் இருக்கின்றன.

வாழ்க்கைச் செலவு ஒருபுறம் துரத்த, காணாமல் போனோரைத் தேடித்தருவதாக கூறி வரும் குழுக்களின் ஏமாற்று வேலை ஒரு புறம் தள்ள நான்கு பிள்ளைகளையும் வளர்த்து ஆளாக்க தனியனாக நின்று உழலும் வினோதா செய்வதறியாது மனிதரிடம் சென்று தன் நிலையை கூற விரும்பாமல் சுவாமி அறைக்குள் கல்லாக அமைந்திருக்கும் சிவனின் முன்னால் மனவேக்காட்டை தீர்த்துக்கொள்வாள். சில வேளைகளில் ஒப்பாரியாக மாறுவது அவளையறியாமல் நடப்பது தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டிப்பர் சாரதியாக குடும்பத்தின் கண்ணாக விளங்கியவன். மூத்தவன் திவ்வியன் பிறந்ததோடு சாரதியாக மட்டுமன்றி இரவு நேரக்காவலாளியாகவும், வங்கியொன்றில் வேலை செய்து வந்தான். அயரா உழைப்பாளி. கைகொடுக்க மனைவி வினோதா. காதல் மணமாயினும் கருத்தொருமித்தவர்கள். ஈன்றவர்கள் நெஞ்சம் குளிர இருவரும் விசேட நாள்களுக்கு குழந்தைகளையும் அழைத்துக்கொண்டு செல்வார்கள். அன்னியோன்னிய உறவு, பெரியவர்களின் ஆசிகளையும் பெற்ற போதும் இப்போது வினோதா பெற்றவர்களையும் துணைவனையும் இழந்து தனியனாய்த் தவிப்பது ஏற்றுக்கொள்ள முடியாமல் தான் இருக்கிறது. ஹரித்தாஸ் நிறுவன உதவியுடனும் ஒரு சில நிறுவனங்களின் சிறு சிறு உதவியினாலும் முறிகண்டியில் சிறுவீடு கட்டிக் கொடுக்கப்பட்டது. வன்னேரிக்குளத்தில் வயல் வெளிக்கிராமத்தில் மாடுகளுடன் ஆடு கோழிகளுடனும் வாழ்க்கையை செம்மையாக நடத்தி வந்த வினோதாவுக்கு தெய்வேந்திரன் இல்லாது இருப்பது சர்வ நாடியும் அடங்கியது போலாகிவிட்டது.

"எடி.. பிள்ளை.. இது ஏனடி இப்ப இடிஞ்சு போயிருக்கிறாய்... உன்ர மூத்த மோன் கோவத்தில சைக்கிளை எடுத்துக்கொண்டு போறான்." பக்கத்து வீட்டு நல்லம்மா மூச்சிறைக்க கூறியதும் துடிதுடித்துப் பதைத்துக்கொண்டு வீதிக்கு சென்றாள்.

"எட கடவுளே... இந்த மனிசன்ர நினைப்பில இருந்து காலமைச்சாப்பாடும் செய்யேல... ரியூசனுக்கும் போகாமல் நிண்டிருக்கிறான்.. இப்ப நான் என்ன செய்யிறது..." அந்த ஒழுங்கைக்குள் கால்போன வரைக்கும் ஓடிச்சென்றாள். 2009 கொடும் போர் வன்னியில் நடந்திராவிடில் என்ர பிள்ளையள் இப்பிடி இருப்பினமா...? தெய்வமே என்னை ஏன் இப்பிடி தினம் தினம் வதைக்கிறாய்..? கத்திக்கொண்டு அவளையறியாமல் பிதற்றிக்கொண்டு சென்றாள்.

அவளது கரங்களை வேகமாக பிடித்தான் திவ்வியன்.. அம்மா... இதென்னம்மா... தலைவிரி கோலமாய்.. ஓடுறியள்... அப்பா தான் எங்களோட இல்லை. நீங்களும் எங்களை விட்டு ஓடுறியளா..ஏனம்மா இப்பிடி நீங்கள்..? எங்களைப் பற்றி நீங்கள் கொஞ்சமும் நினைக்கிறியளா? இல்லையே...! மகன் தேம்பித்தேம்பி அழுவதைப் பார்க்க துன்பமாய் இருந்தது வினோதாவுக்கு. தான் செய்வது பிழை என்று தெரிந்தும் தன்னைத்திருத்திக்கொள்ள நினைக்கவில்லை.

தாயின் ஏக்கம் கதறல் தனியே இருந்து பிதற்றுவது தந்தையின் படத்தை கொண்டு **GS** வீட்டிற்கும், **ArmyCamp** இற்கும் கச்சேரிக்குமாக அலைஞ்சு திரிவது தான் நாளாந்த வேலை. தாயை எப்பிடித்தேற்றுவது? அம்மம்மா,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மப்பா உயிரோடு இல்லையே... வட்டக்கச்சி தானடா... புளியம்பொக்கணை வீதியில் விழுந்த செல்லில் ஒரேடியா மாண்டுவிட்டதை திவ்வியன் எப்பிடி மறப்பான். "ஓதாமல் ஒருநாளும் இருக்க வேண்டாம் ஒருவரையும் பொல்லாங்கு சொல்லவேண்டாம்.." என்று தினம் தினம் சொல்லித்தரும் அம்மாவை அவனால் மறக்க முடியவில்லை. தர்மபுரத்தில் வீட்டின் பொருட்களையும் கொண்டு தங்கைமாரையும் ஏற்றி வரும் போது பின்னால் வந்து கொண்டிருந்த சித்தி நளினாவை பறித்தது. விமானக் குண்டுவீச்சுத் தாக்குதலின் போது பட்ட சிறுதுண்டு.

திவ்வியன் மனமும் உடலும் குழம்பியது. ஆயினும் தந்தைக்கு உதவியாக இருந்தான். தங்கைமார் பூவிழி, தேனிலா தம்பி நரசிம்மனைத் தனது சைக்கிளில் ஏற்றியும் நடந்தும் கொண்டு வந்த முக்கியமான சாமான் மூட்டைகளைத் தவற விட்டதையும் நினைத்து தினமும் வேதனைப்படுவான்.

அவன் கஸ்டப்பட்டு எழுதிய குறிப்பு புத்தகங்கள், பெற்ற சான்றிதழ்கள், தந்தையின் சுயவிபரக்கோவைகள் எல்லாம்... அத்தனையும் தெருவெளியில் சிதறிக்கிடந்தன. ஆனாலும் குனிந்து எடுத்துச்சென்று சேர்க்க குண்டுவீச்சுக்கள் விடவில்லை. பெருந்தொகையான வன்னிமக்கள் ஓட்டமும் நடையுமாக ஒப்பாரியும் குளறலுமாக சொந்த பந்தங்களைத் தொலைத்து விட்டு சுதந்திரபுரத்தில் அடைக்கப்பட்ட பிடி மாடுகளாக இருந்ததை பிஞ்சு மனம் நினைத்தது.

தந்தையின் இருகைகளையும் பூவிழியும் தேனிலாவும் பிடித்துக்கொண்டே இருந்தனர். தாயையும் தம்பியையும் திவ்வியன் பற்றிய படி இருப்பான். "டேய்... தம்பி... கொம்மாவை விட்டிடாதை... சனங்களுக்குள்ள கவனம்... சாமானுகள் முக்கியம் இல்லை. கொம்மா கவனம். அவளுக்கு பிறசர். கவனம் தம்பி..." ஆயிரம் முறை சொல்லிச் சொல்லி எல்லாரையும் தனது கண்களாகக் காப்பாற்றி வந்த தந்தையை பிரித்து விட்டார்களே என்ற ஆத்திரம் அவனுக்கும் தான் இருந்தது.

"அம்மா... வாம்மா... மைத்திரி வந்திட்டார் அம்மா... அப்பாவின்ர செய்தி வரும் அம்மா... என்ன அம்மா... ஓடாதை அம்மா... வாம்மா... தங்கச்சிமார் வந்து தேடுவினம்... அவைகள் ரீயூசனுக்கு போட்டினம்... நான் கூட்டிக்கொண்டு வாறன்..." தாயின் தலைமுடிகளை அள்ளிச்சுற்றி முடிந்து விட்டு கண்ணீரைத் தன் கையால் துடைத்து ஆதரவோடு பற்றி அழைத்து வந்தான்.

பக்கத்து வீட்டு நல்லம்மா உதயன் பத்திரிகையை கையில கொண்டு வந்து வினோதாவைத் தேடினார். திவ்வியன் அந்த பத்திரிகையை வாங்கினான். வீட்டிற்குள் கொண்டு வந்தான். படித்துமுடித்து மேசையில் வைத்து விட்டு தேனீர் வைக்க சென்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாயைப் படுக்கச்செய்து விட்டு மருந்து மாத்திரைகளை கொடுத்து விட்டு வெளியில் வந்தான். தந்தைமார் (பெற்றோர்) தனியாக நடந்து வந்தனர். அவனுக்கு உடலெல்லம் பதறியது. அவர்கள அம்மாவைப்பார்த்து குழறுவார்களே... என்று வாசலுக்கு ஓடோடிச்சென்று

"ஏன் வெள்ளண வந்தீங்க..."

"இண்டைக்கு காணாமல் போனவர்களை விசாரிக்க விசாரணைக்குழு கிளிநொச்சிக்கு வருதாம். பேப்பரில் வந்திருக்காம் அதைத்தான் சொல்ல ஓடி வந்தனாங்கள்..."



உந்த விசாரணையால எங்கட அப்பாவைத்திருப்பித் தரேலாது... உவை பேய்க்காட்டினம். உந்த விசயத்தை அம்மாட்ட சொல்ல வேணாம். அம்மா நிம்மதியா நித்திரை கொள்ளட்டும் இண்டைக்கு பிளீஸ்..."தேனிலாக்குட்டி அம்மாவுக்கு உத சொல்லுவியேம்மா..."கெஞ்சிக்கேட்டான்.

எங்கட வாழ்க்கையை சீரழிச்சதுமில்லாமல் எங்களை நிம்மதியா படிக்கவும் விடமாட்டாங்கள். என்று மனக்குமுறலோடு சொல்லிக் கொண்டு மத்தியானச் சாப்பாட்டுக்கு ஆயத்தம் செய்தான். சனி ஞாயிறு தினங்களில் கூலி வேலைக்குச்சென்று அதில் வரும் பணத்தில் சாப்பாட்டுக்கு தேவையான உணவுப்பொருட்களை வாங்கி வைத்துவிடுவான்.

அயலவர்கள் திவ்வியனின் மன உறுதியைப்பார்த்து வியப்பார்கள்... வினோதாவை குழப்புவதில் பங்கு தாரராக இருப்பார்கள். தாய்க்கு உதவியாக இருந்து படித்து வரும் திவ்வியனுக்கு அவனது கைகளே அவனுக்கு உதவி.

**திருமதி.இ.அருணாசலம்**

*கிளி / உருத்திரபுரம் ம.வி*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூக மேம்பாடும் நூலகமும்

இன்றைய நவீன உலகில் மனிதனின் வாழ்க்கையானது பல சவால்களை எதிர்கொண்டு முன்னேறிச்செல்ல வேண்டியுள்ளது. போட்டியும், பூசலும் நிறைந்த சிக்கலான வாழ்க்கை நீரோட்டம் பல தடைகளைத் தாண்டி செல்ல போதித்துக் கொண்டிருக்கிறது. நாமும் நம் குடும்பமும் தான் என்ற நிலை மாறி இன்று நம் நாடு நம் உலகம் என்று வாழவேண்டியுள்ளது. எனவே இவற்றையெல்லாம் கடந்து வெற்றிநடை போட்டு மனிதன் வாழவேண்டுமானால், அவனுக்கு அறிவு எனும் கத்தி தீட்டப்படவேண்டியுள்ளது. நாளுக்கு நாள் புதிய உலகத்தில் பயணிப்பதற்கு நிறைய தேட வேண்டியுள்ளது. தேடுதல் எனும் பயணம் நூலகத்தினூடாக பயணிக்கும் போது அது அபரிமிதமான வளர்ச்சி நிலையை அடைய வைக்கும் என்பது இன்றைய சமூகத்தில் நாம் காணும் வெளிப்படையான உண்மையாகும்.

ஆம், இன்றைய நிலையில் நூலகமானது சமூகத்தை எவ்வாறு மேம்பாடடையச்செயகின்றது. என்பதே இக்கட்டுரை மூலம் வெளிக்கொணரப்பட இருக்கிறது. முதலில் சமூகம் என்றால் என்ன என்பதை நோக்கின், தனிமனிதர்கள் ஒவ்வொருவரும் கூட்டமாகி ஒன்றிணையும் போது உருவாக்கப்படுவதே சமூகமாகும். இச்சமூகத்தில் அறிவு, திறன், வெளிப்பாடு என்பன வெளித்தெரியும் போதே அது மேம்பட்ட சமூகமாக வெளித்தெரியும். இந்நிலையில் அறிவினைப்பெற்று திறன்களை வளர்த்து சமூகத்தின் மூலம் வெளிக்கொணரும் போது அச்சமூகம் ஏனைய சமூகத்தாலே மதிக்கப்படுகின்றது. மேம்பட்ட சமூகமாகப் போற்றப்படுகின்றது. ஒரு சமூகத்தினை உயர்த்துவதற்கு அதன் குறிகாட்டிகளான கலை, கலாசார, பண்பாட்டு விழுமியங்களை உயர்நிலையில் இருந்தாலும் அறிவு என்ற இனிய சொல்லானது அச்சமூகத்தினூடே நடைபோட்டு வராவிட்டால் அச்சமூகம் பாமர சமூகமாகவே மதிக்கப்படும். எனவே ஒரு சமூகம் சமூகமாக மிளிர்வதற்கு அடிப்படையில் அதன் அறிவுத்திறன் வளர்க்கப்படுவது கட்டாயமாகும். அந்த அறிவினைப் பெறுவதற்கு பலகாரணிகள் இருந்தாலும் நூலகம் முதன்மையாக தன் பங்கினை வழங்கிச்செல்வது இங்கு உண்மையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனி நூலகம் என்றால் என்ன? என்பது தொடர்பாக ஆராய்ந்தால் இற்றைக்கு ஆயிரம் ஆண்டுகளிற்கு முன்பே மொசப்பத்தேமியர்கள் தங்கள் நூலகத்திற்கான அடிக்கல்லை நாட்டி வைத்தார்கள். அதாவது ஆதிகால மனிதன் கற்களை உரசி தீயினைக் கண்டு பிடித்து நாகரீகத்தை வளர்த்துக் கொண்டான். அந்த நாகரீக வளர்ச்சியின் அடிப்படையே அவனது அறிவு மேம்பட்டது என்றால் மிகையில்லை. காரணம் கற்களின் மூலம் தீயினை கண்டுபிடித்து அவன் நாகரிக வளர்ச்சிக்கு முன்னோடியாக இருக்காவிட்டால் இன்றும் மனிதன் காடுகளிலே தான் வாழ்ந்திருப்பான். இந்நிலையில் மொசப்பத்தேமியர்கள் களிமண் தட்டுகளில் தங்களின் அறிவுசார் விடயங்ளைப் எழுதி கோயில்களிலும் அரண்மனைகளிலும் பாதுகாத்தனர். பின் எகிப்தியர்கள் பாப்பரசு தாள்களிலே எழுதிப்பாதுகாத்தனர். இவ்வாறு எதிர்கால சமூகமும் பயன்பெற வேண்டுமென்ற எண்ணக்கருவுடன் தம் அறிவுசார் விடயங்களை பாதுகாத்ததனால் அது நூலகமாகியது. காலப்போக்கில் நூல்களைப் பேணிப்பாதுகாத்து வருவதால் அது நூலகமாகியது. இந்நூலகம் சமூகத்திற்கு பயன்படுகின்றது என்று 1850 ஆம் ஆண்டு ஆங்கில பாராளுமன்றம் சிந்தித்ததனால் அதற்கான அங்கீகாரத்தை வழங்கியது. இதிலிருந்தே ஆதிகால மனிதனே நூலகத்தின் பயனை அறிந்து வைத்திருக்கின்றான். நூலகம் சமூகத்திற்கு எவ்வாறு பயன்பட்டிருக்கிறது என்பது புரிகிறதல்லவா? எனவே தான் கி.மு.4ஆம் நூற்றாண்டுகளிலே 28 நூலகங்கள் இருந்ததாக ஆய்வாராய்ச்சிகள் நிறுவி நிற்கின்றன.

மேற்கூறியவாறு நூலகத்தின் ஆரம்ப வளர்ச்சியின் தாற்பரியம் இன்று சமூகத்திடையே ஒவ்வொரு கிராமத்திற்கு கிராமம் ஒரு நூலகம் என்றவாறு வளர்ச்சி கண்டுள்ளது. மனிதர்களின் உள்ளத்துணர்வுகளை உணர்ந்து செய்யக்கூடிய சேவை நிலையங்களாக அறிவின் பொக்கிசங்களாக நூலகங்கள் மிளிர்ந்து கொண்டிருக்கின்றன. மாணவர்களின் அறிவுப் பசியினைப் போக்கும் அரிய சாதனங்கள் நூலகங்களாகும். இன்றைய கல்வி முறையானது பெரிதும் வேறுபட்ட நிலையிலே சென்று கொண்டிருக்கின்றதை நாம் அறிவோம். அறிவை அவாவி நிற்கும் மாணவனை தேடுதல் மூலம் பெற்றுக்கொள் என்றே ஆசிரியர்கள் வழிகாட்டுகின்றார்கள். அவ்வாறு தேடுதலுக்காக நிறைய நூல்களை வாசிக்கத் தூண்டுகின்றார்கள். இவ்வாறு வழிகாட்டப்படும் மாணவர்கள் ஓடோடிச் செல்லுமிடம் நூலகமாகத்தான் இருக்கிறது. காரணம் பொருளாதார நெருக்கடியில் வாழும் மாணவர்களின் வாழ்க்கையில் தேடுதலுக்கு அவாவி நிற்கும் நூல்கள் அனைத்தையும் பெற்றுக்கொள்ள முடியாது. எனவே ஒரு நூலகத்தை நாடிச்செல்லும் போது அம்மாணவர்கள் நிறைய நூல்களை ஒரே நேரத்தில் கற்பதற்கான சூழல் அமைந்து கொள்கிறது. எனவே தான் நூலகமானது எதிர்கால சிற்பிகளை பட்டை தீட்டிப் பிரகாசிக்க வைக்கும் ஓர் அறிவுச் சுரங்கம் என்றால் மிகையில்லை.

அடுத்து இன்றைய உலகில் "பாமரனையும் பாடவைக்கும்"தன்மை கொண்டது நூலகம். ஆம், முற்றிலும் உண்மையான கருத்தும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதுவாகத்தானிருக்கும். ஓய்வு நேரங்களில் நூலகங்களை நாடிச்செல்லும் போதும் அல்லது நூல்களைப் பெற்று வீட்டிற்கு கொண்டு வந்து வாசிக்கும் போதும் அவனது அறிவு அதிகரித்து செல்கிறதே தவிர ஒரு போதும் குறைவு பெறமுடியாது. சமூகத்தினிடையே வாசிப்புப் பழக்கம் அதிகரித்து செல்வதற்கும் அதன் அந்தஸ்து கூடிச்செல்வதற்கும் நூல்களை வாசிக்கும் பழக்கம் அதிகரித்ததே காரணமாகும். அதனால் தான் என்னவோ, 1750 ஆம் ஆண்டு ஒரு முறை அதிகரித்த அறிவு வளர்ச்சி வீதமானது 1750-1900 ஆண்டுகளிலும் 150 வருடங்களுக்கு ஒரு முறை தான் அதிகரித்தது. ஆனால் இன்று சமூகத்திடையே அறிவு வளர்ச்சியானது ஐந்து வருடங்களுக்கு ஒருமுறை அதிகரித்து செல்கிறதாம். இதனால் 21 ஆம் நூற்றாண்டை அறிவு வளர்ச்சி ஆண்டாக பிரகடனப்படுத்தி இன்னும் இன்னும் அறிவு வளர்ச்சியை அதிகரிக்கச் செய்கிறது. யுனெஸ்கோ நிறுவனம். இதனால் ஐம்பதாயிரம் நூல்கள் நாள்தோறும் வெளிவந்து கொண்டிருக்கிறதாம். இகற்கெல்லாம் அடிப்படையின் காரணம் என்னவெனில் மனிதனின் தேடல் அதிகரித்தது தான் என்று ஆய்வு கூறிக்கொண்டிருக்கிறது. இந்த நூல்களெல்லாம் தேடுதலின் முடிவு என்றால், தேடுதலின் அடிப்படை நூலகத்தினால் தான் போடப்பட்டுள்ளது என்றால் நம்பவும் முடியுமோ? இவ்வாறு நூலகமானது சமூகத்தை அதன் அறிவு ரீதியாக மேம்பாடடையச் செய்கிறது என்பது மலைக்கண் விளக்கல்லவா?

அடுத்து “நல்ல நண்பன் நல்ல நூலகம்” என்பார்கள். ஆம், ஒரு மனிதனிற்கு எத்தனையோ நண்பர் இருந்தாலும் ஆபத்தில் பலர் கைகொடுக்கத் தவறிவிடுவார்கள். ஆனால் ஆபத்தில் துன்பத்திலும் சிரத்தையோடு சிந்திக்கத்தூண்டி அவனை நல்வழியில் இட்டுச்செல்லும். இதனால் சிறந்த முடிவுகளை எடுக்கும் மனிதனாக மாறுவது மட்டுமன்றி தன் சமூகத்தினையும் சிற்ந்த வழிக்கு இட்டுச்செல்வான். இதன் மூலம் அச்சமூகமும் மேம்பாடடையும், அம்மனிதனும் மேம்பாடடைவான். இது மடடுமன்றி ஒரு சமூகமானது இயந்திரமயமான இக்காலகட்டத்தில் “உழைப்பு, உழைப்பு” என்று அல்லும் பகலும் ஓடிக்கொண்டிருக்கும் வேளையில், ஓய்வு நேரங்களில் பிற தீய சிந்தனைகளில் தன்னை ஈடுபடுத்திக் கொள்ள விளைகிறது. இப்பிரச்சனைக்கு தீர்வு காணும் முகமாக அச்சமூகத்தினையே ஒரு நூலகம் அமையப் பெற்றிருந்தால் அவனது சிந்தனை திசைமாறிப் போகாது அறிவு ரீதியாக தன்னை வளர்த்துச்செல்வதில் செலவாகிறது. எனவே தீயவழி போகாது சமூகத்தை சிறப்புறக் கட்டியெழுப்புவதில் அதன் பங்கு மிகைப்பட்டுப் போகிறது.

எனவே ஒரு மனிதனை மனிதனாக்குவதும், அவனை அறிவு பூர்வமாக விளைதிறன் உள்ளவனாக மாற்றுவதும் அவ்விளைதிறனூடாக வினைத்திறன் மிக்க சமூதாய அமைப்பை உருவாக்கி மேம்பட்ட சமூதாய அமைப்பாகவும் அமையப்பெறுகிறது என்பதே உண்மையாகும்.

**திருமதி.ப.அனுசியா**
*தொண்டமான்நகர்,*
*கிளிநொச்சி.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



"நொச்சி" மலர் சிறப்புற வாழ்த்துகின்றோம்.
பிள்ளையார்
ஆட்ஸ் & டிஜிற்றல் பிறிண்ட்
Pillaiyar
Arts & Digital Printing
சகல விதமான
டிஜிற்றல் பிறிண்ட், ஸ்ரிக்கர் பிறிண்ட்,
ரீசேர்ட் பிறிண்ட், மக் பிறிண்ட்,
கல்வெட்டுக்கள், பெயர்ப் பலகைகள்,
லைட் சில்வர் கோல்ட் பெயர்ப் பலகைகள்,
நினைவுச் சின்னங்கள்,
வாகனங்களுக்குரிய இலக்கத்தகடுகள்,
சகல வாகனங்களுக்குரிய ஸ்ரிக்கர் பிறிண்ட்,
ஆட்கட் கட்டிங், பொக்ஸ் மற்றும் டாஸ் போட்
ஆகியவற்றை ஒரே இடத்தில் நியாயமான
விலையில் பெற்றுக்கொள்ளலாம்.
கனகபுரம் வீதி, கிளிநொச்சி
Pilliyardigitalprint@gmail.com
T,P-0777003941,0212060900

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பசுமையில் இருக்க வேண்டிய மரங்களெல்லாம்
வாடிக்கிடந்தது எம் நாட்டில்
மரங்கள் மட்டுமல்ல எம் மனமும்
யுத்தத்தின் வடுக்கள் எம் வறுமையை
பாதித்த மட்டுமல்லாமல் எம் உயிரையும்
பாதிக்கக் கேட்டது.

சிறகு விரித்து பறக்கும் சிட்டுக்குருவிகளான – நாம்
சிற கொடிந்து வீழ்ந்தோம்
சுதந்திரம் இருந்தும் சுதந்திரம் இல்லாமல் போனது
பள்ளிக்குச் செல்லும் நேரத்தில் – யுத்தத்தால்
ஊருக்கவர் மாறினோம்.




எம் ஆற்றல்கள் திறமைகள் வெளிவரும் – நேரத்தில்
எமக்குள்ளே விருப்பின்றி அடக்கினோம் – இவ் யுத்தத்தால்
புத்தகங்களை சுமக்கும் நேரத்தில் – யுத்த
காயங்களை சுமந்தோம் உடலில்
நிம்மதி இழந்த நாம் – எம்
உறவுளையும் இழந்தோம்.

ஏமாற்றத்தை மனதில் கொண்ட நாம்
எமக்கு எப்போ எமது சுதந்திரம்
கிடைக்கும் என விழிப்புடன் இருந்தோம்
உண்ண உணவற்று உறைய வீடற்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தும் ஏங்கினோம் சுதந்திரத்திற்காக.
குழந்தைகளாகிய எம் தவறென்ன?
நாம் பார்த்து நிம்மதியடைய
என்ன இருந்தது ? அப்போது
இரத்த வெள்ளங்களும், இறந்த பிணங்களும்
எம் வாழ்க்கையை வெறுக்க வைத்தன.
சுதந்திரமான கட்டுப்பாட்டுக்குள் இருந்தோம்
சொல்லித்தான் தீருமா எம் துயரம்?
அப்போது விழிப்புடன் காத்திருந்தோம்
எம் சுதந்திரத்திற்காய்

தாயின் தாலாட்டுக்குள் உறங்க
வேண்டிய நாம்
வெடி பொருளின் சத்தத்தில்
விழித்தோம் – பயத்தில்
துணிவுடன் திரிய வேண்டிய நாம்
பயத்துடன் குறுகிக் காணப்பட்டோம்
எப்போ எமக்கு சுதந்திரம் கிட்டும்
என விழிப்புடன் காத்திருந்தேன்.

சசிபரன் சுவாதித்யா
*கிளிநொச்சி மகா வித்தியாலயம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் யார்?



**என்னை ஒரு எழுத்தாளன் என்று சொல்கிறீர்கள். என் பூர்வீகத்தை அறிந்து கொள்ள ஆசைப்படுகிறீர்கள்.**

எதுவரை படித்திருக்கிறாய் என வினவுகிறீர்கள். எப்படி எழுதுகிறீர் என்று கேட்கிறீர்கள். இவற்றிக்கெல்லாம் பதில் கூற வேண்டுமானால் சொற்ப நேரத்தில் சொல்லி விட முடியாது. எனது வாழ்க்கை வரலாறு கனதியான பரிணாமத்தைக் கொண்டது. இனிப்பு, புளிப்பு, கயர்ப்பு, துவர்ப்பு, கசப்பு, எல்லாச் சுவைகளும் கலந்தவை.

நான் பிறந்தது, வளர்ந்தது, வாழ்ந்தது, வாழ்ந்து கொண்டிருப்பது இந்த வன்னி மண் கிளிநொச்சி தான்.

இரண்டாவது உலகயுத்தம் ஆரம்பமான காலகட்டத்தில் ஆயிரத்துத் தொளாயிரத்து முப்பத்தொன்பதாம் ஆண்டு பெப்ரவரி மாதம் பதினோரம் திகதி பரவிப்பாஞ்சன் என்னும் குக்கிராமத்தில் தனு லக்கினத்திலும் விசாக நட்சத்திரத்திலும் துலாம் ராசியிலும் இளைய தம்பி, பார்வதி தம்பியினருக்கு இரண்டாவது புத்திரனாக இந்த மண்ணில் வந்து விழுந்தேன்.

இலங்கை பிரிட்டிசாரின் ஆட்சியில் இருந்த காலம் அது. இரணமடுக் குளம் கட்டுவேலைகள் முடிவடையும் தறுவாய். மட்டக்களப்பில் இருந்து வந்து இவ் வன்னி மண்ணில் குடியேறிய குடும்பங்களில் எங்கள் குடும்பமும் ஒன்று. நான் குழந்தையாக இருந்த போது தற்செயலாக எங்கள் வீட்டுக்கு வந்து சுவாமி ஒருவர் இவனுக்கு இந்தப் பெயரை வையுங்கள் என்று சொல்லி விட்டுப் போனதாக பின்னாளில் அம்மா எனக்குச் சொன்னார். அதே பெயர்தான் எனக்கு இன்றுவரை நிலைத்து நிற்கின்றது.

நான் பிறந்த பொழுது அம்மா நெருப்புக்காய்ச்சலால் பீடிக்கப்பட்டிருந்தார். அதனால் தாய்ப்பால் சரியாக எனக்கு ஊட்டப்படவில்லை. பசுவின் பாலே என் வளர்ச்சிக்கு உதவியது. அம்மாவின் பராமரிப்புக் குறைந்தும் அம்மாவின் தாயான பேத்தியாரின் அரவணைப்புக் கூடுதலாகவும் இருந்தது. பேத்தியாரின் செல்லப்பிள்ளையாக வளரத் தொடங்கினேன் பாடசாலைக்குச் செல்ல வேண்டிய பருவம் வந்ததும் சாட்டு போக்குச் சொல்லி பேத்தியாரை ஏமாற்றிவிட்டு ஏழாவது வயதில் அம்மாவின் கண்டிப்பான வற்புறுத்தலால் பாடசாலையில் சேர்க்கப்பட்டேன். எங்கள் வாழ்விடமான பரவிப்பாஞ்சான் பகுதியில் தான் அரசினர் தமிழ் சிங்கள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலவன் பாடசாலை என்னும் பெயரோடு இயங்கிக் கொண்டு இருந்தது. என் அண்ணாவும் அங்கேதான் படித்துக் கொண்டிருந்தான். வேண்டா வெறுப்போடு பாடசாலைக்குக் காலடி எடுத்து வைத்த நான் காலம் செல்ல விரும்பி படிக்க ஆரம்பித்தேன். ஒரு மனிதன் கவலை அற்ற பருவம் எது என்றால் அது பாடசாலையில் படிக்கும் பருவம் தான் என்பதை இன்று அனுபவத்தால் உணர்கிறேன். ஒரே ஒரு பாடசாலைக்கட்டடமும் ஆசிரியர் தங்கி இருக்க ஒரு வீடு தான் அந்த காணியில் இருந்தது ஒரு ஆசிரியர் மட்டுமே அப்போது இருந்தார். அவருடைய பெயர் அரசரத்தினம் என்பதாக என் ஞாபகத்தில் இருக்கிறது அவர் குடும்பத்தோடு தங்கி இருந்தார். விடுமுறை நாட்களில் ஊருக்குப் போய் பாடசாலை ஆரம்பித்ததும் திரும்பி வருவார். அதுவரை ஓலைச்சருகுகள் குவியப்பட்டு பாடசாலை வெறிச் சோடிக் கிடக்கும்.

கொஞ்சக்காலத்தால் அவர் மாற்றலாகிப் போக பொன்னையா என்பவர் ஆசிரியராக வந்தார் என்பதும் ஞாபகம். நான் இரண்டாம் வகுப்பு படித்துக் கொண்டிருந்த காலத்தில் ஒரு சிங்கள ஆசிரியையும் அங்கு கடமை ஆற்றினார். அந்தப் பாடசாலையில் ஐந்தாம் வகுப்பு வரை தான் கற்பித்தல் இருந்ததால் நான் ஐந்தாம் வகுப்பில் சித்தி பெற்றதும் வேறு பாடசாலையைத் தேடிப் போக வேண்டிய நிலை ஏற்பட்டது. அதே சமயம் ஏழாம் வாய்க்கால் என்னும் பகுதியில் ஒரு வயல் நிலப்பரப்பில் கிடுகினால் வேய்ந்து அடைக்கப்பட்ட பாடசாலை ஒன்று இயங்க ஆரம்பித்திருந்தது. சில பிரமுகர்கள் ஒன்று கூடி திருநெறிக்கழகமும் சேர்ந்து உருவாக்கப்பட்ட அரசினால் பொறுப்பேற்கப்படாத பாடசாலையாக அது இருந்தது. அதில் சேர்ந்து ஆறாம் வகுப்பை ஆரம்பித்தேன். ஆயிரத்துத் தொளாயிரத்து நாற்பத்தைந்திலிருந்து ஐம்பத்திரெண்டாம் ஆண்டுக்குள் கல்வியைப் பெறுவதற்கு இந்த வன்னி பிரதேசத்தில் எவ்வளவு சிரமம் இருந்தது என்பதை எடுத்துக் காட்டவே இவைகளைச் சொல்லுகிறேன்.

மூன்று வருடங்களின் பின்னர் இப்பாடசாலையை அரசு பொறுப்பேற்று இடமாற்றம் செய்யப்பட்டு எட்டாம் வாய்க்கால் என்னும் பகுதியில் இந்து மகா வித்தியாலயம் என்னும் பெயரில் இயங்கத்தொடங்கியது. அங்குதான் ஆங்கில சுருக்கத்தில் சொல்லப்பட்ட JSC என்ற எட்டாம் வகுப்பு பரீட்சை நடந்தது அதிலும் சித்தி அடைந்து SSC என்று சொல்லப்பட்ட ஒன்பதாம் வகுப்போடு என் கல்வி நிறைவு அடைந்து விட்டது.

அன்று பேராதனையில் மட்டுமே பல்கலைக்கழகம் இயங்கியதால் அன்றைய மாணவர்களில் அதிகமானோர் பட்டப்படிப்புக்கு செல்லவில்லை. இருப்பினும் அன்றைய படிப்பாளிகள் அரச உத்தியோகங்கள் செய்தார்கள்.

அப்போதைய கல்வி நிலைக்கும், இப்போதைய கல்வி நிலைக்கும் பேச்சு வழக்கில் சில வித்தியாசங்கள் உண்டு. அன்றைய படிப்பாளிகளைக் கேட்டால் நான் JSC படித்திருக்கிறேன் நான் SSC படித்திருக்கிறேன். அல்லது ஒன்பதாம் வகுப்பு படித்திருக்கிறேன். என்று தான் சொல்லுவார்கள். இன்றைய படிப்பாளிகளைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேட்டால் நான் O/L படித்தவன் அல்லது பதினோராம் ஆண்டு படித்தவன் அல்லது A/L படித்தவன் பன்னிரெண்டாம் ஆண்டு படித்தவன் என்பார்கள். இவை இரண்டுமே பாடசாலைக்குரிய இறுதிப்படிப்பு. அதன் பின்னர் பல்கலைக்கழகத்தில் படிக்கும் பட்டப்படிப்பு. அன்று பேராதனையில் மட்டுந்தான் பல்கலைக்கழகம் இருந்ததால் சிரமங்களின் காரணமாக அனேகமானோர் பல்கலைக்கழகம் போகாமலே உத்தியோகம் செய்தார்கள். இன்றைய நிலையில் பல இடங்களிலும் பல்கலைக்கழகம் இருப்பதாலும் படிப்பாளிகளின் பெருக்கத்தாலும் புள்ளி அடிப்படையில் பல்கலைக்கழகம் போகிறார்கள். அன்று படிப்பதற்கு பயன்படுத்தப்பட்ட நூல்கள் அனுபவ ரீதியாக எழுதப்பட்டவை. இன்று பயன்படுத்தப்படும் நூல்கள் விஞ்ஞான ரீதியாக எழுதப்பட்டவை. அன்று கல்வியே முக்கியத்துவம் பெற்றது. இன்று புள்ளியே முக்கியத்துவம் பெறுகின்றது.

தான் கற்ற கல்வியை தராதரத்தில் உயர்ந்ததாகக் காட்டிக்கொள்வதிலும் பார்க்க தான் பெற்ற கல்விக்குத் தக்கவாறு தன்னை நல்வழிப்படுத்தி நடந்து கொள்வது தான், தான் கற்ற கல்விக்குச் சிறப்பானது என்பதே எனது அபிப்பிராயம்.

அடுத்து எழுத்து துறையில் நான் கால்பதித்த காரணத்தை சொல்வதனால் ஆரம்ப காலத்தில் இருந்தே கதைகள் விருப்பத்தோடு வாசிக்கும் பழக்கம் என்னிடம் குடிகொண்டிருந்தது. அதிகமாக தமிழ் நாட்டில் இருந்து வெளிவரும் சஞ்சிகைகளையும் நூல்களையும் வாசிக்கும் வாய்ப்புத்தான் எனக்குக் கிடைத்தது. தத்துவக்கருத்துக்களைக் கொண்ட கதைகளே என்னைக் கவர்ந்தன. டொக்டர் வரதராசன், ராபி சேதுப்பிள்ளை, அப்துல்-றகீம் போன்றோரின் நூல்களையே தேடிப்பிடித்து வாசிப்பேன். படிப்படியாக வாசிப்பு பெருக பெருக நானும் எழுதிப்பார்க்கலாம் என்ற எண்ணம் தோன்றியது.

மாணவனாக இருந்த போது பூண்டுலோயாவில் இருந்து வெளிவந்த மாணவ சஞ்சிகையான வெற்றிமணி என்னும் பத்திரிகையைப் படித்துப் பார்க்கும் சந்தர்ப்பம் கிடைத்தது அதில் மாணவ அங்கத்தவனாகச் சேர்ந்து கதைகளையும் கட்டுரைகளையும் எழுதி வந்திருக்கிறேன்.

அப்போது தினகரன், வீரகேசரி பிரதான பத்திரிகைகளாக வெளிவந்து கொண்டிருந்தன. வீரகேசரிக்கு சிறுகதைகள் எழுதினேன். வெளிவரவில்லை. அதற்காகத் துவண்டு போகவில்லை. எழுதுவதை நிறுத்தி விட்டு வாசிப்பைத் தொடர்ந்தேன். அதே நேரம் வாசிப்பு பிரியனான இரத்தினசிங்கம் அவர்களுக்கும் எனக்கும் நெருங்கிய பழக்கம் ஏற்பட்டது. அவர் தான் தினப்பத்திரிகையாக கொழும்பில் இருந்து வெளிவந்த தினப்பத்திரிகையை எனக்கு அறிமுகப்படுத்தி அதற்கு என்னை எழுதும்படி வற்புறுத்தினார். சிங்களச் சகபத்திரிகையாக தினபதி வெளிவந்து கொண்டிருந்தது. எஸ்.டி.சிவநாயகம் அவர்கள் அதற்கு ஆசிரியராக இருந்தார் இன்று அவர் மறைந்து விட்டாலும் இளம் எழுத்தாளர்களை வளரத்து விட்ட பெருமை என்றென்றும் மறையாது. முதல் முதலாக நான் தினபதிக்கு எழுதி வெளி வந்த சிறுகதை வாடாமல்லிகை. அது இன்றுவரை வாடாதமல்லிகையாக என் இதயத்தில் இருக்கிறது. அது வெளிவந்ததும் என்க்குத் தெரியாது. அதை எங்கோ தேடிப்பிடித்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாங்கி வந்து என்னிடம் கொடுத்தவர் நண்பர் க.இரத்தனசிங்கம் அவர்கள்தான். ஒரு சிறுகதை தினபதியில் வெளிவந்து கொண்டே இருக்கும். நானும் தொடர்ந்து எழுதிக்கொண்டே இருந்தேன். கொஞ்சக்காலத்தால் தினபதி நின்றுவிட்டது.

அதன்பின் என்பார்வை சுதந்திரன் பத்திரிகையின் மேல் விழுந்தது. அதற்கும் எழுதினேன். வெளிவந்தன. பின்னர் வீரகேசரி, மித்திரன், மல்லிகை, தினக்குரல் போன்ற எல்லாப்பத்திரிகைகளிலும் வெளிவந்தன. கடைசியாக தற்போது வெளிவந்து கொண்டிருக்கும் வண்ண வானவில்லிலும் வெளிவந்தது. குறிப்பாக என் வளர்ச்சிக்கு தினக்குரல் பத்திரிகை பெரும் பங்கு ஆற்றி இருக்கிறது. இடம் பெயர்ந்து நான் முள்வேலி முகாமுக்குள் இருந்த போது அங்கிருந்து நான் எழுதிய சிறுகதையைத் தாமதப்படுத்தாமல் “நினைவுகள் சுமக்கும் நெஞ்சமாக” வெளியிட்ட பெருமை தினக்குரலுக்கு உண்டு.

தினக்குரல் பத்திரிகையில் “இவர்கள் நம்மவர்கள்” என்னும் தலைப்பில் என்னை அறிமுகப்படுத்தி எழுதி நூல்வடிவத்திலும் சுவடு பதித்த திரு.புண்ணியாமின் ஐயா அவர்களும் என் வளர்ச்சிக்கு துணை நின்றவர்.

ஆரம்பகாலத்தில் சிறு தொழிலையாவது அரசாங்கத்தில் பெற்று என் வாழ்வாதாரத்தைக் கொண்டு நடத்தியிருக்கலாம். அப்போது நான் அதை விரும்பவில்லை. அதை அடிமைப்பட்ட தொழிலாகக் கருதினேன். சுதந்திரப் பறவையாக இருக்கவே விரும்பினேன். தொழில் பழகி கட்டடத்தொழிலாளியாக வாழ்ந்து எத்தனையோ வீடுகளைக் கட்டிக்கொடுத்து அவர்கள் குறைவற்று வாழ நான் சந்தோசப்பட்டிருக்கிறேன். செய்தொழிலைத் தெய்வமாக மதித்தேன். தொழில் செய்து கொண்டும் எழுதுவதை விடவில்லை. அதன் பயனாக 2010 ஆம் ஆண்டில் கலாபூசணம் விருதும், 2011 ஆம் ஆண்டில் கலை எழில் விருதும், 2012 ஆம் ஆண்டில் கலைக்கிளி விருதும், 2013ஆம் ஆளுனர் விருதும் எனக்கு வழங்கப்பட்டது.

2012 ஆம் ஆண்டு “ஓய்வு” என்னும் தலைப்பில் கலாசாரபேரவை கரைச்சி பிரதேச செயலகம் வெளியிட்டு என்னைக் கௌரவித்தது. அடுத்து ‘மோட்சம்” என்னும் தலைப்பில் சிறுகதைத் தொகுதி நூல் வெளியிடலாம் என நினைக்கிறேன்.

பொன்னாடை போர்த்தி எத்தனை விருதுகள் வழங்கப்பட்டாலும் அத்தனை பெருமையும் எனக்கல்ல. என் வளர்ச்சிக்குத் துணை நின்றவர்களுக்கும் பத்திரிகைகளுக்குமே அது உரியது.வறுமை என்னை வாட்டினாலும் முதுமை என்னைத் துரத்தினாலும் நான் எழுதுகிறேன் எழுதி எழுதி இனிமை பெறுகின்றேன் அப்படியானால் நான் யார்?

**திருநகர் நடராசா**
*இல.761 திருநகர் வடக்கு,*
*கிளிநொச்சி.*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" நொச்சி" மலர் சிறப்புற வாழ்த்துகின்றோம்.

# அகரன்

## புத்தகசாலை

## Akaran Book Shop




சகல விதமான பாடசாலைக்கான பாடப்புத்தகங்கள், அப்பியாசப் புத்தகங்கள்,
எழுது கருவிகள், சிறுவர்களுக்கான படங்கள் மற்றும் நாள் இதழ்கள், போட்டோக் கொப்பி
வசதிகள் , பாடசாலை தரமான உள்ளீட்டுப் பொருட்கள், போட்டிப் பரீட்சைக்கான
வினாத்தாள்கள் என்பவற்றை மொத்தமாகவும் சில்லறையாகவும் , மலிவு விலையில்
விசேட விலைக் கழிவுகளுடன் நீங்கள் எந்நேரமும் பெற்றுக்கொள்ளக் கூடிய ஒரே இடம்.

மத்திய கல்லூரி மைதானம் முன்பாக,
A9 வீதி, கிளிநொச்சி.

**In Front of the Central College Ground,**
**A-9,Road, Kilinochchi.**

**Call : 077 308 3965**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமநீதி பேணுவோம்

மரணித்துப் போய் நிற்கும் மானிட சமுதாயமே!
ஒருமுறை சிந்தித்து பார். நீதி தலைகீழாய்க் கிடக்கிறது
சட்டங்கள் தடம் புரள்கின்றன.

அரசியல் வாதிகளுக்கு ஒருசட்டம்
அந்த ஏழைக் குடும்பத்திற்கு ஒருசட்டம்
ஆம், சட்டமா இயற்றுகிறீர்கள்?
இல்லை சங்கீதம் தானா பாடுகிறீர்கள்?

நீதி தேவதையே! உன்கண்களைக்
கட்டிவிட்டு எத்தனை
நாடகங்கள் துணிவாய் அரங்கேறுகின்றன
மானிட சமுதாயமா! இது என்று
இன்று புலம்பும் உள்ளங்களே.





சமநீதி என்பது சமன் செய்ய வேண்டியது. ஆனால்
சமநீதி என்று விட்டு சாமகானம் பாடாதே அரசே
சமநீதி இல்லாமல் மரணித்த அத்தனை உயிர்களினதும்
ஆத்மா எப்படி ஐயா சாந்தியடையும்.

வித்தியாவின் கொலைக்கே எத்தனை வருடம்
இழுத்தடித்தீர்கள் - வைஸ்ணவியின் உயிர் பழிக்கு
சட்டம் சொன்ன நீதி என்ன - இதுதானா
அரசே நீ வழங்கும் சமநீதி.

சட்டம் இயற்றுகின்றோம் என்கிறீர்கள்
நீதி தேவதையின் காலடியில்
சட்டங்கள் அனைத்தும் தூசு படிந்த
புத்தகங்களாய் புதைந்து கிடக்கின்றன.

சட்டங்களையும் நீதிகயையும்
மறந்து மதிமயங்கி கிடக்கும் மானிடமே!
இனியும் வேண்டாம் உன் அநீதி
இனிமேலாவது சமநீதியைப் பின்பற்று!



கலைச்செல்வன் சைலினி
கிளி / இந்துக்கல்லூரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதத்தைத் தேடி



நாம் ஆளப்பிறந்த உலகம் இது.
இதில் தினம் யானையடித்து சாகுது மனித இனம்
கேள்விகள் கேட்க யாரும் இல்லை
இங்கு நீதியாய் வாழவும் ஆள் இல்லை.

இரக்கம் கொண்டவர் எவருமில்லை – ஏனெனில்
உறக்கம் கொண்டது இந்த மனித இனம்
எல்லையும் வேண்டும் என சண்டைபோட்டு
தொல்லைகள் தேடுது மனித குணம்.

ஜாதி சண்டையில் மண்டை உடைய
வம்பைத்தேடி நிம்மதி தொலைய
இன்ப வாழ்க்கை துன்பமாய் போச்சு
நண்பர்கள் மாறி எதிரியாய் ஆச்சு.

அறிவை மறந்த ஆன்மீகப்பயணம்
இவை யாவையுமே அந்த மனிதத்தின் சயனம்.
உண்மையை மறந்து பொய்மையைத்தேடி
தம்மையே மறந்து தலைக்கனத்தில் ஆடி.

பெற்றவர் கடமைக்கு கல்வியைப் படிப்பான்– பெற்றோர்
நடைமுறையை ஏனோ ஏற்க மறப்பான்
தொல்லைகள் போல் அவர்களை நினைத்து
எல்லை தாண்டி தெருவில் விட்டுவிடுவான்

வீடேறிக்கேட்ட அந்த ஓட்டுப் பிச்சை
பதவியேறிக் கொண்டதும் மறந்துபோகும்.
கொள்ளைகள் மட்டும் அரசியலில் நிற்கும்
கொள்ளைகள் எல்லாம் காற்றில் பறக்கும்.
எங்கே போகுது மனித வாழ்வு?
எங்கு காணினும் ஏற்றத்தாழ்வு
சமத்துவம் மறந்த உலகம் – இதிலே
நீதியும் இல்லை நியாயமும் இல்லை
மனிதத்தைத் தேடிச் செல்ல மனிதரும் இல்லை

ர.கயல்விழி
*கிளி / இந்துக்கல்லூரி*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மொழிபெயர்ப்பு கலையின்
# தோற்றம், வளர்ச்சி, பயன்கள்

உலகத்தில் படைக்கப்பட்ட உயிர் உள்ள விலங்குகளில் இல்லாத சிறப்பம்சம் மனிதனுக்கே உள்ளது. அதில் பேச்சும், சிரிப்பும் முக்கியத்துவமானதாகும். இதனால் மனிதன் ஏனைய விலங்குகளில் வேறுபட்டவனாகின்றான். உணர்வுகள், எண்ணங்கள், அனுபவங்கள் போன்றவற்றை பிறருக்குத் தெரிவிப்பதற்கு பயன்படுத்தப்படும் கருவியே மொழி என்பது மொழி அறிஞர் கருத்தாக உள்ளது. உலகில் வாழும் மக்கள் அனைவரும் ஒரே மாதிரியான தோற்றம், மொழி பழக்கவழக்கங்கள், கலாசாரம் போன்றவற்றைக் கொண்டவராகக் காணப்படவில்லை. இடத்திற்கு இடம் வேறுபட்ட நிலைகளே காணப்படுகின்றது. ஒரு சமூக குழு சிந்திப்பது போல இன்னொரு மனித குழுவினர் சிந்திப்பதும் இல்லை உணர்வதும் இல்லை. அவர்கள் வாழும் சூழலின் தன்மை இந்நிலைப்பாட்டிற்கு காரணமாகும். இவ்வாறு பலவாறான தன்மைகளோடு வாழுகின்ற ஒரு சமூகத்தையோ அல்லது ஒரு தனிநபரையோ புரிந்து கொள்வதற்கும், மதிப்பதற்கும், ஏற்றுக்கொள்வதற்கும் மொழியே பிரதான ஊடகமாக தொழிற்படுகின்றது. இன்றைய உலகில் பல ஆயிரக்கணக்கான மொழிகள் பேசப்படுகின்றன. அம் மொழிகளில் காணப்படுகின்ற முக்கியமான இல்க்கியங்களை அல்லது படைப்புக்களை தாய் மொழியில் படித்து இன்புறுகின்ற நிலையும் இன்று பரவலடைந்து வந்துள்ளன. இவ்வாறான நிலைமாற்றங்களுக்கு முக்கிய காரணமாக மொழிபெயர்ப்பு வளர்ச்சியையே குறிப்பிடலாம்.

மொழி பெயர்ப்பு கலையானது உலகில் எவ்வாறு தோற்றம் பெற்றது. தமிழ் மொழியில் எவ்வாறு தோன்றி வளர்ந்துள்ளது. மொழிபெயர்ப்பின் பயன்கள் எவை என்பதை ஓரளவேனும் விரிப்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## மொழிபெயர்ப்பின் தோற்றம்

உலக இலக்கிய வரலாற்றில் மொழி பெயர்ப்புக் கலை எப்போது தொடங்கியது என்பதை அறுதியிட்டுக் கூறமுடியாது. கி.மு.250 இல் **"விவியஸ் அன்டோனிக்ஸ்"** என்பவர் கிரேக்கத்தில் இருந்து ஹோமரின் ஒடிசியை மொழிபெயர்ப்பு செய்துள்ளார். இதனையே முதலாவது மொழிபெயர்ப்பு என்று அறிஞர்கள் குறிப்பட்டுள்ளனர். இலத்தின் அறிஞர்கள் உலகில் பன்மொழி அறிந்தோரில் முதலிடம் பெற்றிருந்தனர். இதனால் இலத்தீன் மொழியில் பலமொழி பெயர்ப்புக்கள் தோன்றின. கி.பி 9ஆம் நூற்றாண்டுகளிலே அரேபிய கல்வி வளர்ச்சி பெருகத் தொடங்கின. இந்தச்சூழலில் அரேபிய தலைநகரான பாக்தாத்தில் மொழிபெயர்ப்பு மையம் ஒன்று உருவானது. இந்த மையத்தில் அரபு மொழி நூல்கள் பல இலத்தீன் மொழிக்கு மாற்றப்பட்டன.

12ஆம் நூற்றாண்டு மொழிப் பெயர்ப்பின் வளர்சிக்கு அடித்தளம் இட்ட காலமாக அமைகிறது. 20ஆம் நூற்றாண்டு மொழிபெயர்ப்பிற்கு முக்கியமான காலமாக கணிக்கப்படுகிறது. இக்காலத்தில் மொழி பெயர்ப்பு கலை தலை சிறந்த கலையாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரிணாமம் பெற்றது. இக்காலத்தில் தோன்றிய மொழிபெயர்ப்பு நூல்கள் எல்லாம் சமயம் சார்ந்தவையாக விளங்கின. மொழிபெயர்ப்பு வரலாற்றில் தனியிடம் பெற்றுத் திகழ்வது “விவிலிய மொழிபெயர்ப்பாகும்” இன்று உலகில் அதிகமாக மொழி பெயர்க்கப்பட்ட நூலாக விவிலிய வேதம் காணப்படுகிறது.

கி.மு 5ஆம் நூற்றாண்டில் “நெகிமா” எனும் யூதத்தலைவர் அரபுமொழி பேசுகின்ற யூதர்களுக்காக ஈப்ரு மொழியில் இருந்து பைபிளின் பழைய ஏற்பாட்டை அரபு மொழிக்கு மொழி பெயர்ப்பு செய்தார். கி.மு 250 இல் முதல் மொழி பெயர்ப்பு நிகழ்ந்ததாக அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர். அதனை மறுத்து கி.மு210 ஆம் ஆண்டில் ஹமுசாபி அரசன் தனது அரசவை அதிகார அறிவிப்பு முறைகளை மக்களின் பேச்சு மொழியில் மொழி பெயர்க்கச் செய்தார். ஆகவே அதுவே முதல் மொழி பெயர்ப்பு என்று சில அறிஞர்கள் கூறியுள்ளார்கள். 12ஆம் நூற்றாண்டில் “டோலடோ” எனும் இடத்தில் ஜெரோட் ஆப்.சி ரோமனா” என்பவர் மொழி பெயர்ப்பு பணியில் தீவிரமாக ஈடுபட்டிருந்தார். அவரே மொழி பெயர்ப்பாளர்களின் மூதாதையராகப் போற்றப்பட்டு வருகின்றார். அவர் பல்வேறு அறிவியல் படைப்புக்களை கிரேக்க அரபு மொழிகளில் இருந்து இலத்தீன் மொழிக்கு மொழிபெயர்ப்பு செய்துள்ளார். டோலடோ நகரம் ஏறத்தாழ ஒரு நூற்றாண்டு காலமாக மொழி பெயர்ப்பு அறிஞர்களின் முக்கிய நகரமாக விளங்கியது. ஆங்கில தத்துவ ஞானியான “அடிலாட் யூகினிட்ஸ்” என்பவர் அரேபிய மொழியில் எழுதிய “எலிமண்ட்சு” என்ற நூலை இலத்தீன் மொழிக்கு மொழி பெயர்த்தார்கள். இதுவே இவரின் தலை சிறந்த படைப்பாகும்.

16ஆம் நூற்றாண்டில் ஜேர்மனிய மொழிக் கொள்கையாளரும் சீர்திருத்த தலைவருமான மாட்டின் லூதர் அவர்களால் விவிலியா முழுவதும் ஜேர்மனிய மொழியில் மொழிபெயர்க்கப்பட்டது.

இங்கிலாந்து நாட்டு மொழி பெயர்ப்பு கலை எலிசபத் அரசியின் காலத்தில் உயிர் பெற்றது. ஹோமருடைய ஒடிசியும், இலியட்டும் பல மொழி பெயர்ப்பாளர்களின் கவனத்தை ஈர்த்தன. 17ஆம் நூற்றாண்டில் இங்கிலாந்தில் கிரேக்க இலத்தீன் இலக்கியம் மொழி பெயர்ப்பாளரின் கவனத்தை ஈர்த்தன.

19ஆம் நூற்றாண்டில் இலக்கிய உலகிலேயே இணையற்ற மொழி பெயர்ப்பாளராக “தாமஸ் கார்வைஸ்” போற்றப்பட்டார். இக்காலத்தில் பல அறிஞர்கள் மொழி பெயர்ப்பு பணியில் ஈடுபட்டனர். இவ்வாறு செயற்பட்டவர்களில் ஷெல்லி பைரன். லாங்ஃபைலோ போன்றவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள். இக்காலத்தில் முடிவில் பல மொழிகளில் உள்ள படைப்புக்கள் ஆங்கில மொழிக்கு மாற்றம் செய்யப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மொழி பெயர்ப்பின் வகைகள்

மொழி பெயர்ப்பு ஆறு வகைகளாகப் பகுக்கப்படும்.
அவை வருமாறு:-

1. சொல்லுக்கு சொல் மொழி பெயர்த்தல்(Literal and metaphase translation)
2. விரிவான மொழி பெயர்ப்பு (Amplification)
3. முழுமையான அல்லது சரியான மொழிபெயர்ப்பு(Close or accurate translation)
4. சுருக்கம் (Paraphrase or abridgement)
5. தழுவல் (Adaptation)
6. மொழியாக்கம் (Transcreation)

மேலே உரிய வகைகளுக்கு வேறாகச் சம நூல்களை மொழிபெயர்ப்பு, குழந்தைகளுக்கான மொழிபெயர்ப்பு, அறிவியல் மொழி பெயர்ப்பு, திரைப்பட வசன மொழி பெயர்ப்பு, மேடை பேச்சு மொழி பெயர்ப்பு முதலியன மற்றொரு வகைப்பிரிவில் அடங்கும்

தமிழில் மொழிபெயர்ப்பு வளர்ச்சி

தமிழ் மொழியைப் பொறுத்தவரை பண்டைய காலத்திலேயே மொழி பெயர்ப்பு செயன்முறைகள் நடைபெற்று வந்துள்ளன. இதற்கான சான்றுகள் பலவற்றை அறிஞர்கள் முன்வைத்துள்ளனர். அக்காலத்தில் இந்தியாவில் வாழ்ந்த தமிழ் மக்கள் கடல் கடந்து வணிகத் தொடர்பும், பண்பாட்டுத் தொடர்பும் கொண்டிருந்துள்ளனர். இதனால் பிற மொழியை பேச வல்லவர்களாகவும், தமது கருத்தை எடுத்துரைக்கும் ஆற்றல் பெற்றவர்களாகவும் இருந்தனர். தமிழ் நாட்டில் வணிகப்பட்டினமாக காவிரிபூம்பட்டினம் விளங்கியுள்ளது. இங்கு 18 வகையான மக்கள் சுற்றித் திரிந்ததாக பட்டினப்பாலை, மணிமேகலை முதலிய இலக்கியங்கள் தெரிவிக்கின்றன. இந்த அடிப்படையில் நோக்கும் போது மொழி பெயர்ப்பு செயல்முறை அக்காலத்திலேயே தமிழில் சிறப்புற்று இருந்துள்ளதை அறிந்து கொள்ள முடிகிறது.

தொல்பொருள் ஆய்வுகளின் படி அக்காலத்திலேயே சீனர், அரேபியர், யவனர் போன்ற வெளிநாட்டவர் தமிழ் நாட்டில் வணிகம் பெற்றுள்ளமை அறிய முடிகின்றது. அத்துடன் கி.மு 215 அளவில் காஞ்சியில் இருந்து சென்ற தூதுக்குழு ஒன்று சீனப் பேரரசரைச் சந்தித்ததாக காலவழிச் செய்திக் கோவை (charnicle) குறிப்பிட்டுள்ளது.

இன்றைய திருப்பதி மலைக்கு வடமேற்குப் பகுதியான தெலுங்கானா நிலப்பரப்பைக் கடந்து விட்டாலே மொழிபெயர்த்தேயம் தொடங்கி விடுகிறது. என்று சங்கப்புலவர் “மாமூலனார்” குறிப்பிட்டுள்ளார்.

“பனிபடு சோலை வேங்கடத் தும்பர்
மொழி பெயர் தேயத்தர் ஆயினும் நல்குவர்”



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவற்றைத் தொகுத்து நோக்கும் போது தமிழகத்தில் தமிழ் மொழி மட்டுமன்றி பிறமொழிகளும் பேசப்பட்டன. என்பதையும் மொழி பெயர்ப்பிற்கான அடித்தளம் காணப்பட்டிருப்பதையும் அறிய முடிகின்றது. அக்காலத்தில் மொழி பெயர்த்தேயம் என்ற தொடரே மொழி பெயர்ப்புக்கு பதிலாக பாவனையில் இருந்துள்ளது. சங்கப்பாடலில் காணப்பட்ட"மொழி பெயர்த்தேயம்" என்ற அடியைச் சான்றாக குறிப்பிடலாம்.

பண்டைய தமிழரிடம் மொழி பெயர்ப்பு பற்றிய தெளிவான அறிவு இருந்துள்ளதற்கான சான்றுகளாக: தொல்காப்பியம் நூல்களை வகைப்படுத்துகின்ற போது முதல் நூல், வழி நூல் என்று பாகுபடுத்தி வழிநூலை விளங்குகின்ற சந்தர்ப்பத்தில்.

"தொடுத்தல், விரித்தல், தொகைவிரி மொழிபெயர்த்து
அதர்பட யாத்தலோடு அவை மரபினிலே"
(தொல் 1597)

என்ற தொல்காப்பிய நூற்பா சான்றாகும்.

தொல்காப்பியர் காலத்திலேயே வடமொழிச் சொற்கள் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. பண்டைய காலத்தில் தமிழரிடம் காணப்பட்ட மொழி பெயர்ப்பு கலைக்கு மேலும் சான்றாக புறநானூறு, அகநானூறு, குறுந்தொகை, பரிபாடல், பாண்டிய செப்பேடுபத்து, சிலப்பதிகாரம் போன்ற பல இலக்கிங்கள் சான்றுபடுகின்றன. எனினும் முறையான மொழி பெயர்ப்புக் கொள்கைகள் தமிழில் இருந்ததாகத் தெரியவில்லை என்கின்றனர் அறிஞர்கள்.

சிலப்பதிகாரம், மணிமேகலை, பெரியபுராணம் தவிர்ந்த ஏனைய தமிழ்க் காப்பியங்கள் அனைத்தும் பிற மொழிக் கதைகளே. அவை தமிழ் மொழியில் பெரும்பாலும் மொழிபெயர்ப்புகளாகவோ, தழுவல்களாகவோ இருக்கின்றன.

தமிழ் மொழி பெயர்ப்பு வரலாறானது ஐரோப்பியர் வருகையோடு மறுமலர்ச்சி அடைந்ததாகக் காணப்படுகின்றது. இத்தன்மை ஏற்பட ஆங்கில மொழி கற்றவர்கள் மேலைத்தேய இலக்கியங்கள் ஆன நாவல், சிறுகதை, கவிதை போன்ற இலக்கிய வடிவங்களை தமிழிற்கு மொழிமாற்றம் செய்தனர்.

தமிழ் கற்ற ஆங்கில அறிஞர்கள் தமிழ் இலக்கியங்களை தமது தாய் மொழிக்கு மாற்றம் செய்தனர். இவ்வாறு மறுமலர்ச்சி அடைந்த மொழிபெயர்ப்புக் கலையானது பல மொழி இலக்கியங்களை தமிழ் மொழிக்கு மாற்றம் செய்ய உந்து சக்தியாக இருந்தது. எபிரேயம், பாரசீகம், அராபிய, ஆங்கிலம் என பல மொழி இலக்கியங்கள் தமிழிற்கு மாற்றம் செய்யப்பட்டன. ஐரோப்பியர் வருகையானது தமிழ்மொழி பெயர்ப்பு வரலாற்றின் மறுமலர்ச்சி காலமாகத் திகழ்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மொழி பெயர்ப்பின் பயன்கள்

மனிதர்கள் அனைவரும் ஒரே மொழியைப் பேசியிருந்தால் மொழிபெயர்ப்பு என்ற பேச்சிற்கே இடம் இருக்காது. ஆனால் இன்று பல மொழிகளை பேசுகின்ற மக்கள் கூட்டம் வியாபித்திருக்கின்ற உலகத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். ஒவ்வொரு மொழி பேசுகின்ற ஒவ்வொரு மக்கள் கூட்டமும் தனித்துவமான பல பண்புகளைக் கொண்டுள்ளனர். மாறுபட்ட பண்புகளைக் கொண்ட இம் மக்கள் கூட்டத்தினரிடையே எழுகின்ற இலக்கியப்படைப்புக்கள் வாயிலாக அவர்களின் பண்பாடு கலை போன்ற அம்சங்களையும் வாழ்க்கை கூறுகளையும் வேறு சமூகத்திற்கும் வெளிப்படுத்தும் வாயிலாக மொழிபெயர்ப்புக்கள் காணப்படுகின்றன. மொழிபெயர்ப்பால் ஒரு மொழியில் உள்ள செய்தி உள்ளீடுகள் கருத்துக்கள் என்பன இன்னொரு மொழிக்கு காவிச்செல்லப்படுகின்றன. இதனால் சமுதாயப்பண்பாடும், மொழிப்பயன்பாடும் பெருகுகின்றன. இப் பெருக்கம் தேசிய ஒருமைப்பாட்டிற்கும் வழிகோலுகின்றன.

ஒரு சமூகத்தில் தோன்றுகின்ற இலக்கியங்கள் அந்த சமூகத்திற்கே உரித்தான பண்பாட்டுக் கூறுகளைக் கொண்டமைந்தே எழுகின்றன.

உதாரணமாக:-

"பல்சான்றீரே பலசான்றீரே
கயல்முள் அன்ன நரை முதிர்கவுகள்...."
(புறம்195)

என்ற பாடலில்

நல்லவர்கள் என பலராலும் போற்றப்படுபவர்களிடம் காணப்படும் குறையை சொல்வதாயின் வினயமாகவும், பணிவாகவும், சொல்லப்படவேண்டும், எனும் தமிழ்ப் பண்பாட்டுக் கருத்தானது மொழியாக்கம் செய்கின்ற போது தமிழ் பண்பாட்டுக் கூறுகள் பிறமொழிக்கு ஊட்டப்படும் என்பதில் சந்தேகம் இல்லை.

பல இலக்கியங்கள் ஒரு மொழியில் காணப்பட்டாலும் மொழி பெயர்ப்பு இலக்கியங்கள் வருகையால் இலக்கியம் புதுமை உருவாவதுடன் இலக்கியம் பெருக்கமும் நடைபெறும் தாகூர் எழுதிய **"The religion of man"** என்ற ஆங்கில நூலை நா.சேனாதிபதி அவர்கள் "மனிதனின் சமயம்" என்ற தலைப்பில் தமிழாக்கம் செய்துள்ளார். எட்ஷன் ஆர்னால்டு எழுதிய "லைட் ஆப் **Light of Asia** ஆசியா" என்ற நூலை கவிமணி தேசிய விநாயகம் பிள்ளை "ஆசியஜோதி" என்ற தலைப்பில் மொழி பெயர்த்துள்ளார்.இவ்வாறு வேற்று மொழி இலக்கியங்கள் தமிழ் மொழியில் புதுவரவாக வந்து பெருகுவதுடன் புதிய வடிவங்களையும் புதிய பொருள் அமைவுகளையும் தந்துள்ளன. ஷேக்ஸ்பியரின் நாடகங்கள் தமிழாக்கம் செய்யப்பட்டதன் விளைவாக பல புதிய நாடக மேடை அமைப்புக்கள் தோன்றின. மேலை நாட்டு இலக்கியத்தின் வரவினால் தமிழில் நாவல் எனும் புனைகதை வடிவங்கள் தோற்றம் பெற்றன. "வால்ட் விட்மனின்" கவிதை ஏற்படுத்திய தாக்கம் பாரதிமூலம் நவீன கவிதை தோற்றத்திற்கு வித்திட்டது. ஜப்பானிய தேசத்திற்குரிய "ஹைக்கூ கவிதை எமது கவிதை மரபிற்கு புதுமரபாக அமைந்துள்ளன. இவ்வாறான செயற்பாடுகளினால் பல இலக்கியங்கள் எமது மொழியில் கலந்து கால போக்கில் எமக்கே உரித்தான ஒரு இலக்கியமாகி விடுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றைய உலகில் வளர்ச்சியடைந்த அறிவியலில் நாம் பங்கு கொள்ளும் அறிவிற்கு நாமும் சிறு முன்னேற்றம் கண்டுள்ளோம். இதற்கான காரணமாக மேலைத்தேய அறிவியல் கண்டுபிடிப்புக்கள் பற்றிய தகவல்களும் மொழிபெயர்க்கப்பட்ட பின் தான் புதிய சிந்தனை மாற்றத்திற்குள் பிரவேசித்தோம். உதாரணமாக:- நியூட்டனின் இயல்பியல் விதிக்குப் பின்னர் தான் புவியீர்ப்பு விசை என்பதை அறிந்து கொண்டோம். பல அறிவியல் சார்ந்த விடயங்களை இலகுவாக அறிந்து பயன்பெறுவதற்கு மொழிபெயர்ப்பே மூல காரணம் ஆகும். உலகமெல்லாம் அறிவியல் வேகமாகப் பரவுவதற்கும் காரணமாக மொழி பெயர்ப்பே அமைந்துள்ளது.

உலகில் பல வர்க்கப் போராட்டங்கள் கால காலமாக நடைபெற்று பல தீர்வுகள் நிகழ்ந்துள்ளன. இதற்கான முக்கிய ஊற்று சக்தியாக "காள்மாக்ஸின்" சிந்தனையே எனலாம். இவரின் சிந்தனை ரஷ்ய மொழிகளிலேயே இருந்திருந்தால் உலகளாவிய ரீதியில் சமுதாய விழிப்புணர்ச்சி எழாமல் முடங்கிப் போயிருக்கக் கூடும் கார்க்கின் மார்டின் லூதர் போன்றோரின் சிந்தனைகள் பல மொழிகளில் மாற்றங்களும் முன்னேற்றங்களும் அடைந்துள்ளன.

மொழி பெயர்ப்பினால் ஏற்படும் மற்றுமொரு நோக்கத்தைக் கவனிப்போமாயின் எமது தேசத்திற்குரிய சமயங்களாக சமணம், பௌத்தம் சைவம், வைணவம் காணப்படுகின்றன. இஸ்லாம், கிறிஸ்தவம் ஆகிய சமயங்கள் மேலைத்தேயத்தில் காணப்பட்டவை. ஐரோப்பியர் வருகையோடு எமது தேசத்திற்கு வந்த மதமாக கிறிஸ்தவம் காணப்படுகின்றது. இன்று பல ஆயிரக்கணக்கான மக்கள் கிறிஸ்தவத்தினைப் பின்பற்றுகின்றனர். இம் மதங்கள் வேகமாகப் பரவுவதற்கான காரணங்களில் அம்மதத்தில் காணப்பட்ட சமய கருத்துக்களும் ஒன்றாகும். இந்நிலை தோன்றுவதற்கான அடிப்படைக் காரணி மொழிபெயர்ப்பே ஆகும். பைபிள் உலகிலே அதிகமான மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்ட நூலாகக் காணப்படுகின்றது. உலகம் முழுவதும் கிறிஸ்தவமதம் பரம்பலடைவதற்கு பைபிளின் மொழிபெயர்ப்பே காரணமாகும்.

பல்வேறு மொழிச் சமூகங்கள் தங்களுக்குள் உறவு கொள்வதற்கு மொழி பெயர்ப்பு ஒரு திறவு கோலாகும். பிறிதொரு மொழியைக் கற்காமலேயே அந்த மொழியில் காணப்படுகின்ற சாதனைகள் இலக்கியங்கள் அறிவியல் எனப் பல விடயங்களை எளிதாக தாய் மொழியின் ஊடாக அறிந்து கொள்ளும் வாய்ப்பைத் தருகின்றது. மொழிபெயர்ப்பு கலையானது மொழி வளர்ச்சிக்கும் பெரும் தொண்டாற்றி வருகின்றது. அத்துடன் பல மொழிகளைக் கற்றுக்கொள்ளும் ஆர்வத்தினைத் தூண்டும் சக்தியாகத் தொழிற்படுகின்றது.

மேலைத்தேய அறிஞர்களால் மேற்கொள்ளப்பட்ட, மேற்கொள்ளப்பட்டு வரும் கல்வி பற்றிய புதிய சிந்தனைகளையும், கற்பித்தல் நுட்பங்ளையும் நவீன கற்பித்தல் முறைகளையும் மொழிபெயர்ப்பின் வாயிலாகவே அனைவரும் பெற்றுக் கொள்ளக் கூடியதாக உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பியஷேயின் விருத்திப்படிநிலைகள் தோண்டை என்பவரின் இணைப்பு வாதம் ரோல்மனின் கொள்கை போன்ற பல கற்றல் சார்ந்த விதிகள் மொழிபெயர்ப்பினாலேயே எமது மொழிக்கு உள்வாங்கப்பட்டு கற்றல் கற்பித்தல் விருத்திக்கு முக்கிய பங்காற்றுகின்றன.

நமது அறிவைச் சோதித்துப் பார்த்தால் அதில் ஏறத்தாழ முக்கால் பகுதிக்கு மேல் மொழிபெயர்ப்பின் வாயிலாகவே கிட்டியுள்ளதாக இருக்கும். கவிஞர் ஆக்டேவியாபாஸ் ஒரு படி மேலே சென்று நமது அறிவுச்செல்வம் அத்தனையும் மொழிபெயர்ப்பின் வாயிலாகவே கிட்டுகின்றது என்கிறார் (இன்றும் பல நன்மைகள் உள்ளன.)

ஆகவே மொழிபெயர்ப்பானது பல நன்மைகளை உலகத்தில் பரந்து வாழும் அனைத்து சமூகத்திற்கும் அளித்துள்ளது என்றால் அது தவறாகாது. மொழிபெயர்ப்புக் கலையானது இல்லாவிட்டால் இன்று உலகம் ஒரு கிராமமாக சுருங்கி விட்டது என கூறமுடியுமா? என்பதை நாம் ஒரு கணம் நினைத்துப் பார்க்க வேண்டும். இனிவரும் காலங்களில் மொழிபெயர்ப்புக் கலையானது உலகில் மிக முக்கியமான கலைகளில் ஒன்றாக விளங்கும். எனவே எமது நாட்டைப் பொறுத்தவரை மொழிபெயர்ப்பு கலைக்கு சரியான அடித்தளம் ஒன்று இடப்பட வேண்டும். அதில் இளம் தலைமுறையினரை சரியாக வழிநடாத்திச் செல்ல வேண்டும் என்பதே எங்களின் பேரவாவாக உள்ளது.

## உசாத்துணை நூல்கள்


1. பூரண சந்திரன் க. (2002) "நவீன மொழி பெயர்ப்புக் கொள்கைகள்" அகரம், தஞ்சாவூர்
2. வளர்மதி.மு (2003) "மொழி பெயர்ப்புக் கலை" திருமகள் நிலையம், சென்னை
3. சண்முகவேலாயுதம்.சு (1995) மொழி பெயர்ப்பியல் உலக தமிழாராய்ச்சி நிறுவனம்
4. சின்னத்தம்பி.க சுவர்ணராஜா.க (2011) அறிகைத் தொழிற்பாடுகள் ஆசிரியரும் சேம்மடுப்பதிகம் கொழும்பு.




**த.டேவிட் கிஸ்காட்**

*அதிபர்,*

*ஐயனார்புரம் அ.த.க. பாடசாலை*

*வன்னேரிக்குளம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வையகம் புகழும்
# வான்மறைத் தமிழ்

பூமியின் மேனியில் மானிடர் பேசிட
காவிய மொழியென வாய்த்தது
நம் தமிழ்
தேனினில் ஊறிய தீந்தமிழ்
தேவரின் காதலின் கனித்தமிழ்
கூவிடும் பூங்குயில் புகழ்ந்திடு
மின் தமிழ்
புண்ணியர் கோடி பூசித்த பைந் தமிழ்.

மன்னவர் தொழுத மாமொழி
மண்ணிற்கும் விண்ணிற்கும்
முதுமொழி
பண்ணிற்கு வாய்த்த பாமொழி
பாமரம் அறிந்த பசும்மொழி
நம்மொழி தாய்மொழி தமிழ் மொழி.

கண்ணிற்கு நிகரென ஆனதும்
கர்ச்சிக்க வீரம் தோய்ந்ததும்
அர்ச்சிக்க அற்புதமானதும்
அன்பிற்கு அடங்கிப்போவதும்
பண்பிற்கு சிகரம் சேர்த்ததும்
பலகோடி ஆண்டு ஆள்வதும்
பயிருக்கு மழையாய் வீழ்வதும்
உயிருக்கு நிகராய்ப் போனதும்
உன்னதம் உயர்வரம் முத்தமிழ்.

சீர்தளை தொடை அடி கண்ட
கவிமொழி
வள்ளுவன் கடைந்த குறள்மொழி
வண்ணக் கம்பனும் உருகிய முதுமொழி
ஔவையின் உயிரின் ஊன்மொழி
ஆழ்ந்த சித்தர்கள் போற்றிய சிவமொழி
முத்துக்கள் நிறைந்த முதுமொழி
முடிவிலா புகழ் நிறை தமிழ் மொழி.

கணினியில் ஏறிய நவமொழி
கயிலையும் விரும்பிய நெடுமொழி
கங்கை போல் பாய்ந்திடும் தண்மொழி
மங்கையர் காதலின் மனமொழி
மன்னவர் மயங்கிய மதுமொழி
மன்றங்கள் நிறைந்த மாமொழி
மாறிடாதென்றும் ஒளிமொழி
தமிழ்மொழி வையகம் புகழும் வான்மறை.

நிலவாய் மலராய் மதுவாய்,
கொடியார் புலர்வார்
வளர்வாய் திருவாய் கருவாய்
நிழலாய் நெடுமரமாய்
விழுதாய் முழுதாய் கடலாய் ஒளியாய்
இனியும் நிலைக்கும்.
இனிதாம் தமிழ்

ய.தமிழ்நிலா
விவேகானந்தா வித்தியாலயம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உயர்தர மாணவர் தேர்ந்தெடுக்க வேண்டிய பாடத்துறை எவ்வாறு அமைய வேண்டும்.

**இறைவனது உன்னத படைப்புக்களான மனிதர்களாகிய நாம் எமது வாழ்வினை மகிழ்ச்சிகரமாகவும், திருப்தியுடனும் வாழ்ந்து அனுபவிப்பதற்காக எமக்குத் தேவையான சின்னஞ்சிறு விடயங்களைக்கூட ஆராய்ந்து தேர்ந்தெடுக்கின்றோம். தேர்ந்தெடுப்பது என்பது ஒவ்வொரு மனிதர்களுக்கும் உள்ள கலையென்றே கூறலாம். அத்தேர்வானது ஒருவரிலிருந்து இன்னொருவருக்கும் வேறுபடலாம். அந்த வகையில் உணவு, உடை, வசிப்பிடம், பொழுதுபோக்கு, காதல்,திருமணம் என்பவற்றில் தேர்ந்தெடுப்பதைப் போலவே கல்வித்துறையில் தேர்ந்தெடுப்பதென்பது இன்றியமையாத ஒன்றாகும்.**

எமது சிறுவயதிலிருந்தே கல்விக்கான பாடத்துறைகளை நாம் தேர்ந்தெடுத்தாலும் உயர்கல்வியின் போது பாடத்துறைகளைத் தெரிவு செய்வதே மிக முக்கியமாக நோக்கப்படுகின்றது. அந்த வகையில் ஒரு உயர்தர மாணவர் தேர்ந்தெடுக்க வேண்டிய பாடத்துறையானது எவ்வாறு அமைய வேண்டும், அதை எப்படி தேர்ந்தெடுப்பது போன்ற விடயங்களைப் ஒவ்வொன்றாக நோக்குவோமாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயர்தரக்கல்விக்கான தகைமை பெற்றவர்கள் கணிதத்துறை, உயிரியற்துறை, வணிகத்துறை, கலைத்துறை, தொழிநுட்பத்துறை எனும் பாடத்துறைகளுள் ஒன்றைத் தேர்ந்தெடுக்க வேண்டியது கட்டாயமான ஒன்றாகும். அந்த வகையில் மேற்கூறப்பட்ட பாடத்துறைகளில் ஒன்றை எவ்வாறு தேர்ந்தெடுப்பதென்பதில் ஆர்வம் எனும் விடயம் முன்னிலை வகிக்கின்றது. ஏனெனில் எந்தவொரு விடயத்தில் எமக்கு ஆர்வம் இருக்கின்றதோ அந்த விடயத்தையே நாம் தெரிவு செய்வதற்கு அதிக விருப்பமும் ஈடுபாடும் காட்டுவோம்.

எனவே உயர்தர மாணவர் ஒருவர் தேர்ந்தெடுக்க வேண்டிய பாடத்துறையானது அவருக்கு விருப்பமுடைய பாடத்துறையாக அமைதல் சிறப்பானது. நாம் தெரிவு செய்யும் பாடத்துறை நமது எதிர்கால இலட்சியத்தொழிலுக்கு பொருத்தமானதா? " என ஆராய வேண்டும். உதாரணமாக எதிர்கால இலட்சியத்தை ஒரு வைத்திய நிபுணராகக் கொண்ட மாணவன் ஒருபோதும் கணிதத்துறையையோ அல்லது விஞ்ஞானத்துறை அல்லாத வேறெந்த துறையையோ தேர்ந்தெடுப்பது பொருத்தமற்றது.

உயர்தரக் கல்விக்கு தயாராகும் மாணவ, மாணவிகள் உயர்தரக்கல்வி பயிலும் மாணவர்களிடமோ அல்லது உயர்தரக் கல்வியைக் கற்பிக்கும் ஆசிரியர்களிடமோ உயர்தர பாடத்துறை தொடர்பான ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்வது சிறந்ததாகும். .பெற்றோரினது விருப்பத்தின் பேரிலோ அல்லது நண்பர்களின் வற்புறுத்தலின் பேரிலோ பாடத்துறைகளைத் தேர்ந்தெடுப்பது முற்றிலும் தவறான விடயம் என்பதில் ஒருபோதும் ஐயமில்லை.

உயர்தர கல்விக்கு முன் வகுப்புகளில் நாம் அக்கறை காட்டிய மற்றும் ஆர்வம் காட்டிய பாடத்துறைகளை தெரிவு செய்யலாம். உதாரணமாக கணிதபாடத்தில் ஆர்வமுடைய கெட்டிக்காரத்தனமுடைய மாணவன் கணிதத்துறையையும், உயிரியல் பாடத்தில் ஆர்வமுடைய மாணவன் உயிரியற் பிரிவையும் தேர்ந்தெடுக்க முடியும். எதிர்காலத்தில் வங்கிகளில் வேலை செய்யவோ அல்லது வணிக நிறுவனங்களை நடாத்த விரும்புவோர் வணிகத்துறையை தெரிவு செய்வது நன்று. கலைகளில் ஆர்வங்கொண்டோர் கலைத்துறையை தெரிவு செய்ய முடியும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று உயர்தரக்கல்வித் தகைமை கிடைத்தும் தொழில் எதுவும் இல்லாமல் பல இளைஞர்கள் வேலையில்லாப்பட்டதாரிகளாக சமூகத்தில் வலம் வருகின்றனர். பல இளம்பெண்கள் வெளிநாடுகளில் வீட்டுவேலை செய்வதற்காக செல்கின்றனர். அதனால் தான் ஒரு கவிஞர் இக்கவிதையை எமது பாணியிலே கூறுகின்றார்.

"என்ன வளம் இல்லை எம் திருநாட்டில்
ஏன் கையை ஏந்த வேண்டும் வெளிநாட்டில்..."

எனவே உயர்தரக்கல்விக்கான பாடத்துறையை நாம் தெரிவு செய்வது என்பது முக்கியமானதொன்றாகும். நாம் பொருத்தமான பாடத்துறையை தெரிவு செய்வதனால் வேலை வாய்ப்புக்கள் அதிகமாக கிடைக்கும் என்பதில் சிறு ஐயமும் இல்லை. வற்புறுத்தல்களின் பேரிலோ அல்லது சுய தீர்மானத்தின் பேரிலோ நாம் எடுக்கும் முடிவுகள் எமது வாழ்வினை பாழாக்கிவிடும்.

உலகம் தொழிநுட்பமயமாகி விட்டதனால் தொழிநுட்ப துறைக்கான வேலைவாய்ப்புக்களும் பரவிக்கிடக்கின்றன. எனவே தொழிநுட்பம் சார்ந்த அறிவுள்ள மாணவர்கள் அத்துறையை தெரிவு செய்யலாம்.

ஆகவே ஒரு உயர்தர மாணவன் தெரிவு செய்கின்ற பாடத்துறையானது அம்மாணவன் ஈடுபாடு கொண்ட பாடத்துறை சார்ந்ததாகவோ அல்லது. அப்பாடத்துறையால் வேலைவாய்ப்புக்கள் அதிகம் கிடைக்கூடியதாவோ அல்லது எதிர்கால இலட்சியத்துக்கு பொருத்தமானதாகவோ அமைவது நன்று. நாம் கடினப்பட்டு படிப்பது ஒரு தொழிலைப் பெறுவதற்காகவே. எனவே தொழில்வாய்ப்பு குறைவான பாடத்துறையை தெரிவு செய்து கற்காமல் தொழில்வாய்ப்பு கூடிய பாடத்துறையைத் தெரிவு செய்வது நாட்டின் அபிவிருத்திக்கு வழிவகுக்கும் என்பதில் ஐயமில்லை.

**" வாய்ப்புக்கள் தாமாக கிடைப்பதில்லை
எம்மால் உருவாக்கப்படுபவை"**

**செல்வி லக்ஷிகா சந்திரகுமார்**
*கிளி/கிளிநொச்சி மகா வித்தியாலயம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகம் ஒரு விரலில்...

சுட்டு விரலில் உருண்டை
சுழன்று வரும் இன்று
விந்தையுலகம் வியப்பானது...
சுற்றி வரும் பூமி
சுளருது உள்ளங்கையில்
பட்டென்று சேதி
பாய்ந்து வரும்
லண்டன் என்ன, கனடா என்ன
கடகடவென செய்தி
காதுக்குள் நுழையும்
ஊரில் இருக்கும் ஆச்சியின்
உடம்பு சரியில்ல.
கேள்விப்பட்டதும் பெடியன்
கேற்றில் நிற்பான் விடிய
சுற்றி வரும் பூமி
சுளருது உள்ளங்கையில்

இந்தியன் சாறி.
சிங்கப்பூர் சிமிக்கி.
சைனா ஸ்மார்ட்போன்
தாய்வான் ரீவி என
தட்டியதும் டொட் கொம் ஐ.
சட்டென்று வீடு வரும்.
சுற்றி வரும் பூமி
சுளருது உள்ளங்கையில்

பெட்டையின் மாப்பிள்ளை
பேஸ்புக்கில் சுழன்றிடுவான்
சட்டென்று கலியாணம்
சடபுடென்று நடந்தேறும்
தரகரும் இல்லை



தகவலும் இல்லை
படிச்சவன் ஆனாலும்
பிழைச்சவன் ஆனாலும்
பட்டினைத் தட்டிவிட்டால்
பட்டென்று வந்திடுவான்
சுற்றி வரும் பூமி
சுளருது உள்ளங்கையில்

நூல்நிலையம் தேவையில்லை
நூல் வெளியீடும்
ஊரில் இல்லை.
கால் கடுக்க நடக்காமல்
கையில் வந்தே கற்றிடலாம்
கல்விதனைப் பெற்றிடலாம்.
சொல்லிக் கற்று சோம்பேறி ஆகலாம்
சுற்றி வரும் பூமி
சுளருது உள்ளங்கையில்....

இ.பவதாரணி
*கிளி / கிளிநொச்சி ம.வி*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" நொச்சி" மலர் சிறப்புற வாழ்த்துகின்றோம்.

# யூட்ஸ் இஞ்சினியஸ்

# Judes Engineers

KELANI CABLES

நிறுவனத்தின் கிளிநொச்சி மாவட்ட ஏக விநியோகஸ்தர்

## மேலும் எமது சேவைகள்

தொழிற்சாலைக்கான மின் இணைப்பு

Industrial Wiring

வீட்டு மின் இணைப்பு


House Wiring

இடிதாங்கி பொருத்துதல்

Lightning Arrester Fixing

மின் மோட்டர் றீவைண்டிங் மற்றும் பழுது பார்த்தல்

Motor Rewinding and Repair



கனகபுரம் வீதி,
கிளிநொச்சி.

Kanagapuram Road,
Kilinochchi.

Call : 077 185 3345

Viber : 077 869 9249



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆட்கொல்லி டெங்கு



சிங்காரித்து நிற்கும் சிகப்பரிசி வயலும்
அங்கலாய்த்து ஓடிவரும், கங்கைக் கால்வாயும்
திங்கள் ஒளிபட்டுத் தெறிக்கும் தென்னஞ் சோலையும்
சங்கத்தமிழைப் பின்பற்றும் ஊர் பேர் கொண்ட பள்ளியும்
இங்கெந்தக் குறையும் இல்லை என்ற மானிடர்களை
டெங்கு நுளம்பு அழித்து வருகின்றது இன்று.

மானிட இனத்துக்குள் வேறுபாடு – அதிலும்
வானிலும் உயர்ந்தது நம்மினம் என்று போராட்டம் – ஆனால்
பனித்துளியிலும் குறுகிய டெங்கு என்ற ஓரினம்
இனிதாய் எம்மினத்தை அழித்து வருகிறது. அதை
கனிவாய் கைகோர்த்து வேடிக்கை பார்க்கும் பரிதாப நிலை மாற
துணிந்து எழுந்திடுவோம் வாருங்கள்.

முல்லைக் வழிதோன்றிய கிள்ளை மலர்கள்
பள்ளியிலே பக்குவமாய் படித்து விட்டு
புள்ளி மான்களாய்த் துள்ளிக் குதித்து
விளையாடிய மலரை – இன்று
அள்ளி அணைத்த தந்தையின் கைகளால்
கொள்ளி வைக்கும் பரிதாபம் மாற
டெங்கை அழிக்கத் திரண்டிடுவோம்.

படை கண்டு அஞ்சோம்
பலம் கொண்ட நெஞ்சத்தார் நாமென்று
விடைகொடுத்து படைமுறித்த
வீரத்தின் வழி தோன்றிய நாம் – இன்று
நடைபோட்டு நர்த்தனமாடும்
டெங்கை அழித்திட கைகோர்ப்போம்.

ஊர் கூடலும் உண்டு மகிழ்தலும்
உண்மைத் தமிழின் பண்பான வழியாய்
சீர் கொண்டு வாழ்வதற்கு
டெங்கு நுளம்பை அழித்திட
சேர் சேர் மானிடா என்று
சேர்ந்திடுவோம் வாருங்கள்.

மதுசுதன் டிலோஜனா
கிளிநொச்சி மகா வித்தியாலயம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மண் வாசம் நகரத்தில் இருப்பவர்களால் உணர முடியாத ஒன்று.அதனை நம் கிராமத்து மக்களால் மட்டும் தான் உணரக்கூடியதாய் உள்ளது. கிராம மக்களின் கலை, கலாசாரம், பழக்கவழக்கம், வாழ்க்கைமுறை, தொழில்முறை என்பனவற்றை நகர வாழ்க்கையில் ஓடிக்கொண்டிருப்பவர்களால் உணரமுடியாத ஒன்றாய் உள்ளது. நம் நாடு பிறநாடுகளை விட பின்தங்கியதாகக் காணப்பட்டாலும். நம் நாட்டின் பண்பாடுகளை நாம் உணரக்கூடிய அளவிலேயே நம் நாட்டின் வளங்கள் காணப்படுகின்றன.**

அந்த வகையில் எம்நாட்டின் எம்கிராமத்தில் வாழ்வதே சிறப்பாகக் காணப்படுகின்றது. இதனை உணராது. நவீன உலகத்திற்குள் பயணம் செய்பவர்களால் இதனை உணரமுடியாது உள்ளமை கவலையை ஏற்படுத்தும். அதே வேளை நம்மண்ணிலிருந்து துளிர்விடும் நம் மண்வாசத்தையும் நாம் மறக்கலாகாது. நம் நாட்டில் கிராம, நகர பகுதிகளை ஒப்பிடுவோமானால் நாம் வாழும் சூழலில் இருக்கும் அந்த மண்ணின் வாசத்தை நகர வாசிகளால் அனுபவிக்கக் கூட முடியாது.

அந்த வகையில் எம் நாட்டின் கலைகளை நோக்குவோமானால் எம் நாடு ஒரு கலைகளின் சுரங்கமாகவே காணப்படுகின்றது. இசை, நடனம், சினிமா, சித்திரம் போன்ற பல்கலை கொண்டன. எம் நாட்டின் கலை பல சுகங்களையும், பல துன்பங்களையும் கடந்து வந்தாலும் நாம் அதனைக் கருத்தில் கொள்வதில்லை என்பது வெளிப்படையாக தெரியும் ஒரு உண்மையாகவே காணப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்ததாக கலாசாரத்தை நோக்குவோமானால் எம் நாடு தனித்துவமான கலாசாரத்தைக் கொண்ட நாடாகவே காணப்படுகின்றது. அதாவது நம் நாட்டிற்கான தனித்துவமாக்கப்பட்ட கலாசார விழா, கலாசார பண்புகளைக் கொண்டுள்ள எமது நாடு வேறு நாடுகளைச் சேர்ந்தவர்களால் அறியக் கூடியதாய் உள்ளதெனினும் எம் நாட்டைச் சேர்ந்தவர்களாலேயே அதனை பின்பற்றவோ, அறியவோ முடியாதது மன வருத்தத்தை ஏற்படுத்தும் ஒன்றாகவே காணப்படுகின்றது.

மூன்றாவதாக எம் நாட்டின் பழக்கவழக்கங்கள் பிரதான இடம் வகிக்கின்றது. ஒவ்வொரு நாட்டிற்கும் தனிப்பட்ட பழக்கவழக்கங்கள் உள்ளது. அதே போன்று எம் நாட்டிற்கும் தனிப்பட்ட பழக்கவழக்கங்கள் உண்டு . அதனை நம்மவர்கள் அறிவதுமில்லை, கடைப்பிடிப்பதுமில்லை. ஆனால் நம் மண்ணின் வாசத்தை உணர்ந்த விவசாயிகள் மற்றும் கிராமத்தை அண்டிய சூழலில் வாழ்பவர்கள் இப்பழக்க வழக்கத்தைக் கடைப்பிடிப்பதை நாம் அவதானிக்கக் கூடியதாய் உள்ளமை முழுமையான மனமகிழ்வைத் தராவிடினும் பகுதிபட மகிழ்வைத் தருகின்றது.



அடுத்ததாக எம் நாட்டினரின் வாழ்க்கை முறையில் பல விடயங்களில் மாற்றம் கண்டு வருகின்றமையை நாம் அவதானிக்கக் கூடியதாய் உள்ளது. வாழ்க்கை முறையை மாற்றுவது எமது முன்னோர்களை மாற்றுவதாகக் கருதப்படுகின்றது. அதாவது இவ்வாழ்க்கை முறையானது எம்முன்னோர்கள் எமக்களித்த பாரிய சொத்து என்று கூட கூறலாம். ஏனென்றால் நம் நாட்டின் வாழ்க்கை முறையை விதித்த எம் முன்னோரை நம் வாழ்க்கை முறையை மாற்றுவதன் மூலமும் கடைப்பிடிக்காது விடுவதன் மூலமும் அதனை இழக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்குள் நாம் செல்வதை இன்று மட்டுமல்ல நாளையும் நிறுத்தமாட்டோம். அப்படி நாம் எமது பழமையான வாழ்க்கை முறைக்குள் உட்புகுந்து செல்லும் போது எமது வாழ்க்கை மறுபடியும் முன்னோர்களின் வாழ்க்கைக்கு நிகரான ஒன்றாக அமையும் என்பதில் எவ்வித அச்சமுமில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொரு நாட்டிலும் ஒரு பிரதான தொழில் காணப்படும். அதே போன்றே நம் நாட்டிலும் விவசாயம் முக்கிய பொருளாதாரமாகக் காணப்படுகின்றது. நம் நாட்டில் விவசாயிகளினால் மட்டுமே மண்வாசத்தை அறியமுடியும் என்பது நான் அறிந்தளவு உண்மை. ஏனென்றால் அவர்கள் மட்டுமே எந்த மண்ணில், எந்தப் பயிர், எந்தக் காலத்தில், எவ்வளவு விளைச்சல் தருமென அறிந்திருப்பார்கள். அவர்களால் மட்டுமே எம் நாட்டின் மண்வாசனையை உணரமுடியும்.

அனைவரும் கூறுகின்றார்கள் "கிராமம் என்பது வளரச்சியடையாத ஒன்று அங்கு அடிப்படை வசதிகள் எதுவுமே நிவர்த்தி செய்யப்படுவதில்லை அங்கே இருப்பவர்கள் அனைவரும் படிக்காத பாமரர்" என்பார்கள். ஆனால் படித்தவனாலும் கூறமுடியாத ஏன் படித்தவனாலே அறிந்திருக்க முடியாத பலவிடயங்களை ஒரு கிராமத்தவன் அறிந்திருப்பான். ஏனென்றால் அவன் அந்த மண்ணின வாசத்தில் பிறந்து, அந்த மண்ணில் வளர்ந்து அந்த மண்ணிலே தனது நாளைக் கழிக்கும் ஒருவனாக இருப்பான். அவனுக்கு தெரியும் அந்த மண் வாசத்தினை, இதுவே கிராமத்தவனுக்கும், நகரத்தவனுக்கும் காணப்படும் பாரிய வேறுபாடு ஆகும்.

நகரத்து மனிதர்கள் எதையெல்லாம் பிட்சா, பர்கர் என பலவகைப்பட்ட உணவுகளை உண்டாலும் அவர்களுக்கு அம்மா கையால் செய்யும் ஒரு கைபிடி சோறு அதற்கு மேலான சுவையாக காணப்படும். நகரத்திலே வாழும் ஒரு மனிதன் சராசரியாக எழுபது வயது மட்டுமே வாழ்கின்றான் என்றால் நம் கிராமத்தில் வாழ்பவர்கள் நூறு வயது மட்டும் வாழ்கிறார்கள். ஏனென்று நோக்கினால் நகரமக்கள் எதற்கெடுத்தாலும் இயந்திரங்களையே பயன்படுத்துகின்றார்கள். ஆனால் நம் கிராமமக்கள் தங்கள் வாழ்க்கை ஆரம்பித்ததிலிருந்து வாழ்க்கைமுடியும் வரை இயந்திரங்களின் உதவியில்லாமலேயே செயற்படுகின்றமை கிராமத்தவனுக்கும் நகரத்தவனுக்கும் இடையிலான பாரிய வேறுபாட்டைக் காட்டுகின்றது.

மண்வாசம் என்றால் அனைவரும் நினைப்பது மழை பெய்ய மண்ணிலிருந்து வருகின்ற வாசம் என்று. ஆனால் நம் நாட்டின் கலை, கலாச்சார, பண்பாடு, வாழ்க்கை முறை, தொழில்முறை என்பன எம் மண்வாசம் என்று எவரும் உணர்வதில்லை. அப்படி உணர்ந்தால் நாம் எம் மண்ணையும் அதற்கான பழக்கவழக்கங்கள் கலைகள் எல்லாம் மறக்கவே மாட்டோம் என்பது மிகப்பெரிய உண்மை.

**ஜெ.கோமகன்**
*தரம் - 10*
*கிளி / விவேகானந்த வித்தியாலயம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" நொச்சி" மலர் சிறப்புற வாழ்த்துகின்றோம்.






# நாதன்'ஸ்

## ஆயுர்வேத மருந்துக்கடை

இல.05, டிப்போ சந்தி அருகாமை,
கனகபுரம் வீதி, கிளிநொச்சி.

**No:05, Near Depot Junction,**
**Kanagapuram Road, Kilinochchi.**
**T.P 077 066 6024**





ஆயுர்வேத மருந்துச் சரக்குகள்,
சகலவிதமான கிரியைப் பொருட்கள், ஆலய அபிஷேகப்
பொருட்கள், ஆலய தீப ஆராதனைப் பொருட்கள்,
அத்திபார நாட்பொருட்கள், பிள்ளைப்பேற்று
நாட்சரக்குகள், குழந்தைகளுக்கான
கிரந்தி எண்ணெய் மற்றும் சகல விதமான எண்ணெய்
வகைகளையும் பெற்றுக்கொள்ளலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாசி மாதம்......... நேரம் நண்பகலைத் தாண்டியிருந்தது. மாசிப் பனிக்கு ஒத்த மாதிரி வெயிலும் மண்டையைப் பிளக்குமாப் போல் வெறித்தனமாக எறித்துக் கொண்டிருந்தது. அரசல் புரசலாக அடுப்படி வேலையளக் கவனிச்சுக் கொண்டிருந்த போதுதான் போன கிழமை விசுவா சொன்னது ஞாபகத்திற்கு வந்தது விசாகத்துக்கு..........

போட்டதப் போட்டப்படி அப்பிடியே விட்டுட்டு நாலு வாளி வக்கு வக்கு ... எண்டு அள்ளி ஊத்திக் கொண்டு வெளிக்கிடக்கிள்ளதான் குடும்ப காட்டின் நினைப்பு வந்தது அவளுக்கு....... விதானையார் வீட்ட ஏதேனும் பதிவு கிதிவு........எண்டாத்தான் உந்த குடும்ப காட்டின் நினைப்பு வரும்..........

# காத்திருப்பு



ஐயோ! கடவுளே இப்ப உதை எங்க தேடுறது இது என்ன அநியாயமப்பா! கடைசியா உந்தக் குடும்பக் காட்டை என்னதுக்கு?

எடுத்தனான்..............இப்பவர வர செரியான ஞாபக மறதி.........புத்தியும் மங்கிக்கொண்டு போகுது என்றபடி பிடரியைச் செறிந்தாவாறே தட்டு முட்டுக்களுக்குள் குடும்பக் காட்டைத் தேடினாள்.......ஆ....ஆ.....கடசியா அந்த மரக்கறிக் கொட்டையள் குடுக்கிற நேரம் எடுத்தது எண்டு நினைப்புவந்தது.......மெதுவா ஒரு கையால நாரியைப் பிடிச்சுக்கொண்டு மற்றக் கையால அலுமாரியின்ற கீழ்த் தட்டுக்குள் கைய விட்டாள்

விசாகம்...... சீ.......இதென்ன ஒரே தூசியும் தும்பட்டையுமாக் கிடக்குது எண்டக்க தான் வந்த சிவராத்திரிக்கு வீடு கழுவக்குள்ள அலுமாரிக்குள்ள தூசு தட்ட மறந்தது நினைவுக்கு வந்தது......



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதென்ன கரைச்சல்
அறளை பேந்து போச்சப்பா
ஒண்டும் ஞாபகத்தில
நிக்கிதில்ல.......

இப்ப அங்க சரியான
சனமாயிருக்கும்...........கியூவில
வேற நிக்க வேணும்
காணாமப் போனவயளப்
பத்தின பதிவெண்டா
சும்மாவே.......
ஊரிப்பட்டசனமாயிருக்கப்
போகுது.........என்ர
பெருமானே!.........ஒருவாறாக
ஆத்தில போட்டத
குளத்தில தேடின
கதையா......குடும்பக்
காட்டை
எடுத்தாச்சு........இனி
உந்தக் குடை எங்கே
கிடக்குதோ?......

வெய்யில்
கொளுத்தியது......வெய்யில்
என்ன
வெய்யில்.......சூடுபட்டு...சூடு
பட்டு சுறணை போய்விட்டது
கால்களுக்கு......கடதாசி
முள்ளுக்குத்தி வந்த
ஆணிக்கூட்டில றோட்டுச்
சல்லிக் கல்லு
அண்டினபோது தான்
உறைத்தது செருப்பையும்
மறந்திட்டு வந்தது..........
இப்ப நடக்கவும்
ஏலுதில்ல........நாரிக்க வேற
பிடிக்குது......பரியாரி சிங்காரத்தின்ர
நோவு எண்ணெயில
வேலையேயில்ல.......என்னத்தப்
போட்டுக் காய்ச்சி
வடிக்குதோ....மனிசன் புளுத்த
நாத்தம்......அதையாரும்
போடுவானே.....மணமெண்டால்
வயித்தப் பிரட்டிக் கொண்டு
வரும்......போடாத
மருந்துக்கும்.......மாறாத
நோவுக்குமான விசாகத்தின் விளக்கம்
தான் அது.

மெது மெதுவாக குதியில வந்த
நோவு காலுக்குள்ளாள நாரிக்குள்ள
வந்து முதுகுத் தண்டைத் தெண்டுவது
போலிருந்தது........எரிச்சல் எரிச்சலாக
வந்தது விசாகத்துக்கு.......எத்தினை
பதிவுகள்.....எத்தினை
விசாரனைகள்......சீச் சீ உவர்
விதானையாருக்கும்
வேலையில்ல.........வந்து மீளக்
குடியேறின நாள்த் தொட்டு இல்லை
இல்லையெண்டாலும் எத்தனையாயிரம்
பதிவுகளப்பா........பதிஞ்ச
கடதாசிகளால முழு மனிசனையே
மூடிப் போடலாம்......அலுத்துக்
கொண்டாள் விசாகம்.

மங்கலாய்த் தான் தெரியுமாப் போல
கிடக்குது. ஆ.... உது எங்கட
பச்சைப் பெட்டி மீன் விக்கிற
செல்வத்தார் போல
கிடக்குது......கிட்ட வர வர தன்
ஊகிப்பு சரியெண்டு உறுதிப்படுத்திக்
கொண்ட
விசாகம்..................மணல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றோட்டுக்கால .....அவன்
விலத்திக் கொண்டு போக
வழியை விட்டு ஓரமாக
நடந்தாள்.......நடையிலும்
தளர்வு தெரிந்தது.......
அதையும் அவள்
உணராமலில்லை.............

ஆ........விசாகமக்கா.........
எங்க
பயணமே..........என்ன மீன்
வாங்கேல்லயே..... நல்ல
மலிவு........ ஒட்டி, பாரை,
சூரை...... எண்டபடி
சைக்கிள் பிறேக்கை
அமத்தினான்..........சீ....சீ......
எனக்கு ஒண்டும்
வேணாமடா......முந்தநாள்
சதுர்த்தி......... எனக்கு
ஒண்டும் வேணாமடா........
பிறகு பாப்பம் என்றபடியே
நடையைக்
கட்டினாள்..........

ம்...... இவர் இப்ப
இருந்திருந்தா...... இப்ப
விட்டிருப்பாரே.........
நாங்கள் என்ன
விரதமோ........
வேள்வியோ........
மனிசனுக்கு மச்சத்தண்ணி
மணக்காம
தொண்டைக்குள்ளால
சாப்பாடு இறங்கிறதெண்டா
என்ர சீமானுக்கு..........
இப்பிடித்தான்
ஒருக்கால்........... எனக்கு
நல்ல ஞாபகம் அதுவும் காப்புக்
கும்பத்துக்குள்ளதான்........
பயித்தங்காயும் பருப்பும் தான்
கறியெண்டு முறுகிக் கொண்டு மனுசன்
சாப்பிடாமலே இருந்துட்டுது.......பிறகு
இவள் பிள்ள சாந்தி தானே வெளியால
அடுப்பு பத்த வைச்சு சூடக் கருவாடு
சுட்டுக் குடுத்தவள்......... நீங்கள்
என்ன விரதமெண்டாலும் பிடியுங்கோ
என்ன என்ர பாட்டில
விட்டுடுங்கோ..........எண்டதுதான்
மனிசன்ரகொள்கை............என்னக்
கட்டின காலத்தில இருந்து மனிசனுக்கு
மரக்கறியளின்ர சுவை என்ன மாதிரி
எண்டு தெரிஞ்சிருக்குமோ எண்டது
நானறியன்.........!
திடிரெண்டு புரககேறியது கண்களில் நீர்
முட்டியது உரத்துச் செருமி அடக்கிக்
கொண்டாள். அப்பிடித்தானே
மனிசன்....சும்மா ஏரம்பர் எண்டாத்தான்
ஊரில சின்ன வட்டுக்கத்தரிக்காயுக்கும்
தெரியும்....ஓமோம்.....அவர்
வேட்டையில ஒரு புலி.....எங்கட பீட்டர்
நாயோட போனா ரெண்டால்
முயலோ.....உடும்போ இல்லாம
வரார்....அப்படிதான் அவர்
கொண்டுவாறத பங்கு போட்டு அக்கம்
பக்கத்தில குடுத்துத் தானே மனிசன்
சாப்பிடுறது.......

இப்ப காலமெல்லாம்
மாறிப்போச்சுது.......உடும்புகளுக்கு
வெள்ளி திசை எங்களுக்குத்தான்
கலிகாலம்.......அண்டைக்கும் றோட்டால
போன உடும்ப திரத்திக் கலைச்சு
புத்துடைச்சு கஸ்ரப்பட்டு பிடிச்சவன்
வண்டில் காற சோமு....... பாவம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் என்ன
கஸ்ரப்பட்டவன்.....ஆனா.....றோட்டால
ரோந்து போன ரெண்டு
ஆமிக்காரங்கள் கண்டுட்டு
அறம்புறமாக ஏதேதோ எல்லாம் பேசி
பிடிச்ச உடும்ப
விடச்சொல்லிட்டாங்கள்.....பெடியனுக்கு
கைக் கெட்டினது வாய்க் கெட்டாமப்
போச்சுது......உப்பிடித்தான்
எல்லாம்......காலம் தலைகீழாப்
போச்சுது.......இப்ப ஆக்களுக்கு
புதுசா நாலுகாசு பிடிபட்டோண்ண
பழசுகள எல்லாம் மறந்துட்டு
கண்ணக் கட்டி விட்ட குதிரயள்
மாதிரி எல்லே திரியினம்....எல்லாம்
கலி முத்திப்போச்சு

நாங்கள் இஞ்ச வந்து எங்கட
ஊரில குடியேறி வாற வைகாசியோட
முழசா நாலுவருசம் முடியப்
போகுது......நானும் இவரத் தேடித்
தேடிப் போகாத இடமும் இல்ல
ஏறாத படியுமில்ல என்ன
செய்யிறது.....என்ர பெருமானே
ஊரிப்பட்ட கடிதங்கள் , துண்டுகள் ,
விசாரணையள் எண்டு அலைஞ்சு
திரியிறது தான் மிச்சம்.....
உருப்படியான ஒரு பதிலுமே
இதுவரைக்கும் வரேல்ல........
முகாமில இருந்த காலந்தொட்டு
இண்ட வரக்கும் தமிழ் , சிங்களம்
எண்டு எல்லா இடத்துக்கும்.........
கடிதங்கள் அனுப்பிற்றன்.........
ஏதோ கடவுளே எண்டு அவர்
நொண்டியோ...........முடமோ..........
எனக்கு உயிரோட வந்திட்டாப்
போதும்.............

அண்டைக்கும் உப்பிடித்தான் உடும்புப்
பிடியாய் நிண்டார்...........
செல்லடியண்டா மாரி மழை மாதிரி
சரமாரியாப் பொழிஞ்சு
கொண்டிருந்திச்சு............ அந்தச்
சுதந்திரபுரத்தில நூறு வீட்டுத்
திட்டத்தில இருந்து சனமெல்லாம்
மூட்டையளோட வெளிக்கிட்டுக்
கொண்டுதான் இருந்ததுகள்........ ஆறு
நாலு ரெண்டு எண்டு அப்ப
ஆளுக்கொரு பைகளில தான் வீட்டுச்
சாமான்....... அப்ப ஆர் சாமான்
சக்கட்டுக்கள பத்தி
யோசிச்சது............ எல்லாரும் உயிர்
மட்டும் உடம்பில இருந்தாக் காணும்
எண்டுதான் நினைச்சிருப்பினம்...........
நானும் பிள்ளையுமாய் வங்கருக்குள்ள
இருந்து கொண்டு........ வாங்கோ........
வங்கருக்குள்ள வாங்கோ........ எண்டு
எவ்வளவு கெஞ்சியும் மனிசன்
வராது........ சாகிறது ஒரு நாளைக்குத்
தானே....... உதுக்குள்ள வந்து
மூச்சடைச்சு சாகிறதுஞ் சரி.............
செல்லடி பட்டு சாகிறதுஞ் சரியெண்டு
பிடிச்ச பிள்ளையார் மாதிரி
இருந்தவர்................ உப்பிடித்தான்
அவர்ட குணம்.......... தான் பிடிச்ச
முயலுக்கு மூண்டு காலெண்டு
நிப்பார்......... செல்லடி கொஞ்சம்
ஓஞ்சோண்ண தான் வெளியில
வந்தம்............ அப்ப தான் மனிசன்
கேட்டது.............. அந்த வைன்
மணிக்கூடு வைச்சிருந்த உரைப்பை
எங்கயெண்டு................ நானும்
பிள்ளையுமாய் முழுசினம் பிறகுதான்
அத நேற்றைக்கு இருந்த தறப்பாள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொட்டிலுக்க விட்டுட்டு வந்திட்டம் எண்டு சொன்னம்............... அதுக்க தானே வளவு , வயல் , காணி உறுதி எல்லாம் எஃ்டு பேசு பேசு எண்டு பேசீட்டு மனிசன் வாகீசன் றோட்டுப் பக்கம் வெளிக்கிட்டுது............. நானும் பிள்ளையுமாய் கெஞ்சு கெஞ்செண்டு கெஞ்சினம் மனிசன் எங்க கேட்டுது............சுவர்ண பூமி உறுதிதான் அது உந்த ரத்த பூமிக்குள்ள போனவர் . அந்த உதவாமப் போன வைன் மணிக்கூட்டில மனிசனுக்கு ஒரு கண்..... முந்தித் தனக்கு உடற் கட்டழகர் போட்டியில பரிசாக் கிடைச்சதெண்டு அடிக்கடி சொல்லுவார்.

என்னத்த அழுது புரண்டாலும் எங்க அவர் கேட்டார். இந்தாபிடி எடுத்துக்கொண்டு வாரன் எண்டு போனவர்........ எல்லாச் சனமும் புத்துக்கால வெளிக்கிட்ட புடையனுகள் மாதிரி பொக்கணப் பக்கம் போகப் போக... நெஞ்சுக்குள்ள தண்ணியே இல்ல........ அப்பிடியே ஆக்களோட ஆக்களா நாங்களும் போயிட்டம்..........ம்..... இப்ப மாதிரி இருக்குது....... கண்கள் நீர் கோர்த்துக் கொண்டன.

அண்டையில இருந்து இண்டை வரைக்கும் அவர் உயிரோட இருக்கிறாரோ........... இல்லையோ......எண்டு ஒண்டுமே தெரியாது....... ஐயோ......! என்னண்டாலும் அவர் வரவேணும்.......... இத்தியடியானே உனக்கு பெரிய நேத்தி செய்வன்......

நீண்ட தொரு பெருமூச்சு.......... நிச்சயமாக அதில் நிம்மதி இருப்பதாகத் தெரியவில்லை.......... நினைப்புக்கள் மீள வந்த போது தான் தெரிந்தது விதானையாரின்ர ஒப்பீஸ் வந்தது......... சனவெள்ளத்தினை நோக்கி....... மெதுவாக நடக்கிறாள் விசாகம்........... கனதியான மனதுடன் காத்திருப்புக்கு விடைகாண்பதற்கு.............. முற்றும்.

**மரியநாயகம் கேசவன்**
*உருத்திரபுரம் கிழக்கு*
*கிளிநொச்சி*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org